# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

# ஆண்டறிக்கை - 2013

# தவிசாளரின் செய்தி

2003 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் மூலம் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (CAA) தாபிக்கப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டுக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத உரிய அனைத்து செயலாற்றுகைகளின் செயலாற்று மதிப்பீட்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதிகாரசபையின் ஒட்டுமொத்த குறிக்கோள் வர்த்தகம், பண்டங்களின் விலைகள் மற்றும் சேவைகள் ஆகியவற்றிற்ன் மீதான ஒழுங்கு விதிகள் மூலம் பாவனையாளர்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்குவதுடன் வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் நேர்மையற்ற மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைகளில் இருந்து பாதுகாப்பதுமாகும். மேலும் பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் வர்த்தகர்களிடையே ஆரோக்கியமான போட்டித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இயலுமான சந்தர்ப்பங்களில் போட்டித்தன்மைமிக்க விலைகுறித்தலை மேம்படுத்தவும் எதிர்பார்க்கிறது. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டு 9 வருடங்களுக்குப் பின்னால் செயலாற்றுகையில் அடைந்துள்ள முன்னேற்றம் எமது நிறுவனத்தின் ஒட்டுமொத்த குறிக்கோள்களின் அடைவையே காட்டுகிறது என நான் நம்புகிறேன். இந்த விடயம் விசேடமாக அதிகரித்துள்ள பாவனையாளர் வினாக்களினாலும் தினந்தோறும் வெளிவரும் ஊடக அறிக்கைகளினாலும் உண்மைப்படுத்தப்படுகிறது.

பாவனையாளர்களின் ஆரோக்கியத்தையும் பாதுகாப்பையும் கேள்விக்குரியாக்கும் ஏமாற்றுகரமானதும் நேர்மையற்றதுமான வர்த்தக நடைமுறைகளை தீவிர போட்டித்தன்மையுள்ள திறந்த பொருளாதாரத்தில் கண்கூடாகக் காண்பது மிக இலகுவானதாகும். இவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக வர்த்தகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் புதிய பணிப்புரைகளையும் கட்டளைகளையும் பாவனையாளர்களின் பாதுகாப்பை வலுப்படுத்த நாம் விடுத்துள்ளோம். இதனடிப்படையில் நாம் புதிய 05 பணிப்புரைகளை வழங்கி சந்தை முறைகேடுகளை தணிப்பதற்கான வழிவகை செய்துள்ளோம். இது தவிர தர நியமங்களுடன் ஒத்துச் செல்லாத 207 இறக்குமதிப் பொருட்களிலிருந்து பாவனையாளர்களை பாதுகாக்க சுகாதார அமைச்சு மற்றும் இலங்கைச் சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து கூட்டாக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பாவனையாளர்களிடையேயும் வர்த்தகர்களிடையேயும் அறிவை வழங்குவதற்காக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களையும் நாடளாவிய ரீதியில் CAA தொடர்ச்சியாக நடாத்தியது.

பாதிக்கப்பட்ட பாவனையாளர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 84%வை வெற்றிகரமாக தீர்க்கப்பட்டுள்ளதுடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மூலம் திருப்திகரமான நிவாரணத்தைப் பெற்றுக்கொண்ட பாவனையாளர்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையைப் பாராட்டியுமுள்ளார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அத்தியவசியப் பொருட்களாக வகைப்படுத்தப்பட்டிருந்த 14 உற்பத்திகளின் விலைகளைக் கட்டுப்படுத்த பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் முடிந்துள்ளது என்பதை தினசரி சந்தை மதிப்பாய்வை மீளாய்வும் பகுப்பாய்வும் செய்யும் போது தெளிவாகின்றது. சந்தை விலைப் பொறிமுறை தொடர்பில் விரிவான ஆய்வொன்றின் விளைவாக மேலே குறிப்பிடப்பட்ட பொருட்களுக்கான உச்ச சில்லறை விலையை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தீர்மானித்து விதித்தது.

இதேவேளை மேலே குறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சந்தையின் ஆரோக்கிய நிலையைப் பேணுவதற்கு பாவனையாளர்களை சூரையாகின்ற ஏமாற்றுகின்ற, நேர்மையற்ற வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனடிப்படையில் 25,287 சந்தை சுற்றுவளைப்புகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை மேற்கொண்டுள்ளதுடன் 84.7 மில்லியன் ரூபாவை தண்டப்பணமாக விதித்தது.

இந்த இலக்கை அடைந்து கொள்வதில் பங்களிப்பை வழங்கிய பணிப்பாளர் சபைக்கும் பணியாட்டொகுதியினருக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பலவிதத்திலும் வழிகாட்டடல்களை வழங்கி பணியாட்டொகுதியினரை ஊக்குவிப்பதற்குச் செயற்பட்ட கௌரவ அமைச்சருக்கும் அமைச்சின் செயலாளருக்கும் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பாவனையாளர் பாதுகாப்பிலும் ஆரோக்கியமான போட்டித்தன்மையை மேம்படுத்துவதிலும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்த பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு ஆதரவளித்த சகல தரப்பினர்களுக்கும் முக்கியமாக நான் நன்றியுடையவனாக இருக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

கலாநிதி.ஆர்.எம்.கே. ரத்நாயக்கா

தவிசாளர்

## நோக்கு

ஒழுக்கமான வணிக கலாசாரத்தினுள் நன்கு பாதுகாக்கப்பட்ட பாவனையாளர்கள்

## செயற்பணி

பாவனையாளர்களை வலுவூட்டல், வியாபார ஒழுங்கு விதிகள், ஆரோக்கியமான போட்டித்தன்மையை மேம்படுத்தல் ஆகியவற்றின் மூலம் நுகர்வோரின் உரிமைகளையும் நலன்களையும்பாதுகாத்தல்

## எமது கூட்டிணை இலக்குகள்

1) வியாபார ஒழுங்குகள் மூலம் மகிழ்ச்சியான பாவனையாளர்கள்

2) நியாயமற்ற வியாபார நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட பாவனையாளர்களுக்கு நிவாரணமளித்தல்

3) கல்வி, விழிப்புணர்வு மூலம் நுகர்வோரை வலுவூட்டல்

4) எதிர்மறையான போட்டித் தன்மைமிக்க வியாபாரப் பழக்க வழக்கங்களிலிருந்து வியாபாரிகளையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டித்தன்மையை ஊக்குவித்தல்

5) ஆற்றலை மேம்படுத்தல் மூலம் நிறுவன ரீதியான அபிவிருத்தி

## எமது கூட்டிணைப் பெறுமானங்கள்

- **நம்பிக்கை**

  தொடர்ச்சியான செயலாற்றுகையைப் பேணல் மற்றும் தங்கியிருத்தலை உறுதிப்படுத்தல்

- **நேர்மையும்நியாயமும்**

  சகல செயற்பாடுகளின் போதும் நேர்மையாகவும் நியாயமாகவும் சரியாகவும் நடந்துகொள்ளல்

- **வகைப்பொறுப்புக் கூறல்**

  எவ்விதமான செயற்பணிகளை ஆற்றிய பொழுதிலும் அதில் வெளிப்படைத் தன்மை,வகைப்பொறுப்புக் கூறல்,பொறுப்பு ஆகியவற்றைப் பேணல்

- **கூட்டுப் பொறுப்பு**

  முறையான தொடர்பாடல், நெகிழ்சித் தன்மை ஆகியவற்றின் மூலம் ஒருவரை ஒருவர் நம்புதல், மதித்தல், பரஸ்பர புரிந்துணர்வை மேம்படுத்தல், பொது இலக்கை அடைதல் ஆகியவற்றின் நிமித்தம் அனைத்து ஊழியர்களும் கூட்டாக செயற்படல்

- **அங்கீகாரம்**

  ஊழியர்களது சிறப்பான செயலாற்றுகைகளை விதந்து பாராட்டுதல்

- **அர்ப்பணிப்பு**

  வழங்கப்பட்டுள்ள செயற்பணியை வெற்றிகரமாக அடைவதற்கான அர்ப்பணிப்பு

- **பதிலிறுப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்**

  சேவைகளை வழங்குவதற்கான விருப்பமும் தயார் நிலையும்

- **ஆக்கத்திறன் மற்றும் புத்தாக்கத்தன்மை**

  சகல அம்சங்களிலும் தொடர்ச்சியான முன்னேற்றம் ஏற்படும் வகையில் புதிய கருத்துகளை உருவாக்கல்.

1ஆம் மற்றும் 2ஆம் மாடிகள்,

கூட்டுறவு மொத்த விற்பனைத்தாபன செயலகக் கட்டிடம்

இல. 27, வொக்ஷோல் வீதி,

கொழும்பு -02.

26.05.2015

கௌரவ கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்

ஐயா,

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரிவு 14(2) இன் பிரகாரம், கணக்காய்வு செய்யப்பட்ட சென்மதி நிலுவை, வருமானம் மற்றும் செலவினம் பற்றிய கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றுடன் 2013 ஆம் வருடத்துக்கான ஆண்டறிக்கையையும் நான் இத்துடன் சமர்ப்பிக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

கலாநிதி.ஆர்.எம்.கே. ரத்நாயக்கா

தவிசாளர்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

# பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

## ஆண்டறிக்கை -2013

உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எம்மைப் பற்றி | |
| | 1.1 அறிமுகம் - - - - - - - - - - | 08 |
| | 1.2 அதிகாரசபை யாப்பு - - - - - - - - | 08-10 |
| | 1.3 அதிகாரசபை பணியாட்டொகுதி - - - - - - - | 10 |
| | 1.4 பாவனையாளர் அலுவல்கள் பேரவை- - - - - - - | 11 |
| 2. | அதிகாரசபையின் குறிக்கோள்கள் - - - - - - - | 12 |
| 3. | அதிகாரசபையின் பணிகள் - - - - - - - - | 13-14 |
| 4. | பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை/ பாவனையாளர் அலுவல்கள் பேரவையின் செயலாற்றுகை -2013 - - - - - - - | 15-36 |
| 5. | 2013 டிசெம்பர் 31ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை பற்றிய கூற்று - | 37 |
| 6. | 2013 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று - | 38 |
| 7. | 2013 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்று - | 39-46 |
| 8. | 2013 டிசெம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற வருடத்துக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - | 47-56 |
| 9. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றி தவிசாளரின் கருத்துரைகள் - | 57-65 |

# எம்மைப் பற்றி

## 1.1 அறிமுகம்

1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம், 1950 ஆம் ஆண்டின் விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் ஆகியன நீக்கப்பட்டு 2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தினால் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் முன்னுரையின் பிரகாரம், வியாபாரம் மற்றும் பண்டங்களின் விலைகள் மற்றும் சேவைகளை ஒழுங்காக்குதல் மற்றும் நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளுக்கும் வரையறையுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கும் எதிராக வரத்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் ஆகியவை மூலமாக பாவனையாளர்களுக்கான சிறந்த பாதுகாப்பை வழங்குவதே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் முழுமையான நோக்கமாகும். அத்துடன், சாத்தியப்படுமிடமெல்லாம் போட்டியான விலையிடலை ஊக்குவிப்பதற்கும் பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியாளர்கள் மற்றும் வர்த்தகர்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டியை உறுதி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2 அதிகாரசபை யாப்பு

சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், அதிகாரசபையானது தவிசாளர் ஒருவரையும் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறான தகைமைகள் மற்றும் அனுபவத்தை உடைய ஆட்களிடையே இருந்து, அமைச்சரினால் நியமிக்கப்படும் பத்திற்குக் குறையாத வேறு உறுப்பினர்களையும் கொண்டமைந்துள்ளது.

அதிகாரசபை உறுப்பினர்கள்– 2013

2013 ஆம் ஆண்டிறுதியில் உள்ளவாறு பதவி வகிக்கும் உறுப்பினர்களின் பெயர்கள்:

| | |
|---|---|
| திரு.றூமி மர்ஸூக் | தவிசாளர் |
| திரு.மில்ரன் அமரசிங்க | முழுநேர உறுப்பினர் |
| திரு.சுனில் ஜயவீர | முழுநேர உறுப்பினர் |
| மேஜர் ஜெனரல் நிமல் ஏ. ஜயசூரிய | முழுநேர உறுப்பினர் |
| மேஜர் ஜெனரல் பி. சந்ரவன்ச | உறுப்பினர் |
| சங்கைக்குரிய ரெக்காவ ஜினரத்ன தேரர் | உறுப்பினர் |
| சங்கைக்குரிய ஜயந்திபுர விமலவன்ச தேரர் | உறுப்பினர் |
| திருமதி சந்ரா ஏக்கநாயக்க | திறைசேரி பிரதிநிதி |
| திரு.சுகத் மொகான் பிராங் த சில்வா | உறுப்பினர் |
| திரு. துஷான் சூசா | உறுப்பினர் |
| திரு. வினோத் தன்சிங்கனி | உறுப்பினர் |
| திரு. ஜே.எம். ஜயதிலக ஜயசுந்தர | உறுப்பினர் |
| திரு. வருண அலவ்வ | உறுப்பினர் |
| திரு. அநுர பர்னாந்து | உறுப்பினர் |
| திரு. அனில் குமார சேனாதீர | உறுப்பினர் |
| திரு. எச்.எம்.எல். ஹேமந்த பண்டார ஹேரத் | உறுப்பினர் |
| திரு. பஸில் வன்லங்கன்பேர்க் | உறுப்பினர் |
| திரு. டப்ளியூ.ஏ.சி. ஹேமகுமார | உறுப்பினர் |
| திரு. ஆர்.பீ. தென்னகோன் | உறுப்பினர் |
| மேஜர் வை.எச்.பி.என்.வை. சேனாதிபதி | உறுப்பினர் |
| திரு. எம்.பீ.எம். இப்ராஹிம் | உறுப்பினர் |
| திரு. மாதவ சன்ஜீவ வத்தேகம | உறுப்பினர் |
| டாக்டர் ஜயந்த பலவர்தன | உறுப்பினர் |
| திரு. எம்.எச்.எவ். ஷெரிப் | உறுப்பினர் |
| திரு. பின்சித் அமில பெரேரா | உறுப்பினர் |
| செல்வி எம்.என்.பி. குணரத்ன | 2012.1017ஆம் திகதியிலிருந்து அமைச்சின் பிரதிநிதி |
| திரு. கே.டீ.டீ.கே. த ஆப்று | உறுப்பினர் |
| திரு ஏ.எம். விஜேரத்ன அதிகாரி | உறுப்பினர் |

| | |
|---|---|
| திரு எம்.ஏ. விமலவீர | உறுப்பினர் |
| திரு டி.சி. கிறிஸ்ரி ஜயசேகர | உறுப்பினர் |
| டாக்டர் (திருமதி) பி. தல்கஸ்வத்த | உறுப்பினர் |
| டாக்டர் டி.எஸ். ஜயவீர | உறுப்பினர் |
| திரு. டபிள்யு. சுதம்மிக்க வீரமன் | உறுப்பினர் |
| திரு. சமன் சஞ்ஜீவ பதிரண | உறுப்பினர் |
| திரு. ரி.ஜி.ஜி. தா்மவா்த்தன | உறுப்பினர் |
| திரு. ரி.பி. ஆனந்த ஜயலால் | உறுப்பினர் |
| திரு. கே.ஏ.டி.ஆர். கிரிஸ்ரி | உறுப்பினர் |
| திரு. ஜி.கே.ஜி.எல்.எஸ்.பி. ஜயவர்த்தன | உறுப்பினர் |
| டாக்டர் , லக்ஸ்மி சோமதுங்க | உறுப்பினர |

1.3 அதிகாரசபை பணியாட்டொகுதி

2013 ஆம் ஆண்டின் போது திரு. நூமி மர்ஸுக் அவர்கள் தொடர்ந்தும் 2013 ஆம் ஆண்டில்தவிசாளராக பணியாற்றினார். 2012 டிசெம்பர் 03ஆம் திகதியிலிருந்து திரு. ஜே.எம்.ஏ. டக்லஸ் (இலங்கை நிருவாக சேவை அலுவர்- வகுப்பு-1) அவர்கள் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமாக கடமையேற்றார்.

அதிகாரசபையின் பிரிவுத் தலைவர்கள்– 2013

| # | பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திருமதி தீப்தி திஸ்ஸேர<br>M.PA [PIM-ஸ்ரீ ஜயவர்தனபுர]–சட்டத்தரணி | பணிப்பாளர்<br>இணக்கம் மற்றும் அமுலாக்கம் |
| 02 | திருமதி சந்திரிகா திலகரட்ண<br>B.Scவிவசாயம் (விசேட) M.Sc (முகாமைத்துவம்) | பணிப்பாளர்<br>பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல் |
| 03 | திருமதி. சாந்தினி திருநீலகண்டன்<br>[ACEA] | பணிப்பாளர்<br>போட்டி ஊக்குவிப்பு |
| 04 | திரு. டப்ளியூ.எம். பிரியந்த<br>MPM B.Com (விசேடம்) கௌரவ பட்டதாரி,AIPFM,DPFM | பணிப்பாளர்<br>நிதி |
| 05 | திரு. சம்பத் அங்குலுகஹ<br>B. Com (விசேடம்) கௌரவ பட்டதாரி,AIPM(இலங்கை). Dip in PM | பணிப்பாளர்<br>மனிதவளங்கள் மற்றும் நிருவாகம் |
| 06 | திரு. ரொகான் மீவனகே- குறித்த காலத்தின்போது விலையிடல் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளரின் கடமைகளைத் தொடர்ந்து கவனித்து வருகிறார். | |

## 1.4 பாவனையாளர் அலுவல்கள் சபை

சட்டத்தின் (iv)ஆம் பிரிவின் பிரகாரம், பாவனையாளர் அலுவல்கள் சபை தாபிக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் ஜொன்ஸ்ரன் பெர்ணாந்து அவர்கள் திரு. உபாலி சேனாரத்ன அவர்களை 2013.05.20 ஆம் திகதி முதல் தவிசாளராகச் செயற்படும் வகையில் நியமித்தார்.இவர் 2013 ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் சபையின் தவிசாளராகத் தொடர்ந்து சேவையாற்றினார்.

பாவனையாளர் அலுவல்கள் சபை உறுப்பினர்கள்:

| | | |
|---|---|---|
| திரு. உபாலி சேனாரத்ன (AAL) | - | தவிசாளர் |
| திரு. வசந்த குணவர்தன | - | உறுப்பினர் |
| திரு. சுதத் விஜேவிக்ரம | - | உறுப்பினர் |

பேரவை செயலாளர்

செல்வி லேகா ஆர்யரத்ன (சட்டத்தரணி)

## 2. அதிகாரசபையின் குறிக்கோள்கள்

அ. பாவனையாளர்களின் உயிருக்கும் ஆதனத்துக்கும் தீங்கு விளைவிப்பதான பண்டங்களைச் சந்தைப்படுத்துவதற்கெதிராக அல்லது சேவைகளை வழங்குவதற்கெதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்

ஆ. நியாயமற்ற வியாபாரப் பழக்கங்களுக்கெதிராகப் பாவனையாளர்களைப் பாதுகாத்தலும் பாவனையாளர் நலனுக்குப் போதியளவு கவனஞ் செலுத்தப்படுமென்பதற்கும் உத்தரவாதமளித்தலும்

இ. இயலுமானவிடத்தெல்லாம் பாவனையாளர்கள் நியாயமான விலைகளில் பண்டங்களையும் சேவைகளையும் போதியளவு பெற்றுக் கொள்ளுவதனை உறுதிப்படுத்துதல், அத்துடன்

ஈ. நியாயமற்ற வியாபாரப் பழக்கங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரப் பழக்கங்கள் அல்லது வேறு வகைப்பட்ட வழிகளில் வியாபாரிகளால் பாவனையாளர் சுரண்டப்படுதல் என்பவற்றுக்கெதிராக நிவாரணம் தேடுதல்.

## 3. அதிகாரசபையின் செயற்பணிகள்

1) அ. தொழிற்பொறுப்பு முயற்சிகளிடையே மட்டுப்படுத்தும் வியாபார உடன்படிக்கைகளை;

ஆ. விலைகள் தொடர்பில் தொழிற்பொறுப்பு முயற்சிகளிடையே உடன்பாட்டொழுங்குகளை;

இ. சந்தைக்குள்ளாக அல்லது சந்தையின் கணிசமான பகுதியில் உள்நாட்டு வியாபாரம் அல்லது பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் ஆதிக்க நிலையைத் துஷ்பிரயோகம் செய்தலை, அல்லது;

ஈ. உள்நாட்டு அல்லது சர்வதேச வியாபாரத்தை அல்லது பொருளாதார அபிவிருத்தியைப் பங்கமாகப் பாதிக்கின்ற போட்டி மீதான ஏதேனும் மட்டுப்பாட்டை

கட்டுப்படுத்தல் அல்லது இல்லாதொழித்தல்;

2) போட்டி எதிர்ப்பு நடைமுறைகள் மற்றும் ஆதிக்க நிலையைத் துஷ்பிரயோகம் செய்தல் என்பன பற்றிப் புலனாய்வு செய்தல் அல்லது விசாரணை செய்தல்

3) பண்டங்களையும் சேவைகளையும் வழங்கும் ஆட்களிடையே வினைத்திறமையான போட்டியைப் பேணுதலும் மேம்படுத்தலும்

4) பண்டங்களினதும் சேவைகளினதும் விலை. அவை கிடைக்கக்கூடிய தன்மை, அவற்றின் தரம் அத்துடன் அவை வழங்கப்படும் வகைகள் என்பன தொடர்பில் அத்தகைய பண்டங்களினதும் சேவைகளினதும் பாவனையாளர்களினதும் கொள்வனவு செய்வோரினதும் அத்துடன் வேறு பயன்படுத்துநர்களினதும் நலன்களை மேம்படுத்தலும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்தலும்

5) கொள்வனவுக்குக் கிடைக்கச் செய்யப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் தரம், அளவு, ஆற்றல், தூய்மை, தராதரங்கள் மற்றும் விலை என்பன பற்றிப் பாவனையாளர்களுக்கு அறிவித்தல்

6) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஏதேனும் கருமம் தொடர்பில் புலனாய்வுகளையும் விசாரணைகளையும் கொண்டு நடாத்துதல்

7) நடப்பில் உள்ளதை விடப் போட்டியானது குறைவாக இருக்குமிடத்து, சந்தைகளின் போட்டி விலைகளை மேம்படுத்துதல்

8) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் கற்கைகளை மேற்கொள்ளல், அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்

9) பகிரங்கத் துறையினதும் தனியார் துறையினதும் வினைத்திறமைக் கற்கைகளை மேற்கொள்ளுதல்

10) பாவனையாளர்களின் உடல் நலம், காப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாவனையாளர் கல்வியை ஊக்குவித்தல்

11) சந்தை நிலைமைகள் மற்றும் பாவனையாளர் அலுவல்கள் தொடர்பில் வேறு நிறுவனங்களுடன் தகவல் பரிமாற்றத்தை முன்னேற்றுதல்

12) பாவனையாளர் ஒழுங்கமைப்புகளைத் தாபிப்பதனை மேம்படுத்துதல், உதவுதல் மற்றும் ஊக்கமளித்தல்

13) அதிகாரசபையினால் ஆற்றப்பட்ட எவையேனும் சேவைகள் தொடர்பில் அத்தகைய கட்டணங்களை விதித்தல்

14) அதிகாரசபையின் பணிகளை நிறைவேற்றுவதனை இயலச் செய்வதற்கு அவசியமாகக் கூடியவாறான ஏதேனும் அத்தகைய குழுக்களை நியமித்தல், அத்துடன்

15) அதிகாரசபையின் பணிகளை வினைத்திறமையாக நிறைவேற்றுவதற்கும் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் செய்தல்.

4. பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை செயலாற்றுகை

நிறுவனக் கட்டமைப்பின் பிரகாரம், அதிகாரசபையானது 06 பணிப்பாளர்களின் கீழ் இயங்கும் 06 பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. அவையாவன:

1) பாவனையாளர் அலுவல்கள் மற்றும் தகவல்
2) இணக்கம் மற்றும் அமுலாக்கல்
3) விலையிடல் மற்றும் முகாமைத்துவம்
4) போட்டித்தன்மையை ஊக்குவித்தல்
5) நிதி
6) மனிதவளம் மற்றும் நிருவாகம்
7) உள்ளகக் கணக்காய்வு

2013 ஆம் ஆண்டின் போதான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

1. **தீங்கு விளைவிக்கும் மற்றும் குறைந்த தரம் கொண்ட பண்டங்கள் மற்றும் சேவைளிலிருந்து பாவனையாளர்களைப் பாதுகாத்தல்.**

அ. சட்டத்தின் 10ஆம் மற்றும் 12ஆம் பிரிவுகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகள்

i. பணிப்புரை இலக்கம்45–பத்தி உற்பத்தியாளா்கள், இறக்குமதி செய்வோா் மற்றும் விற்பனை செய்பவா்கள் இந்தப் பணிப்புரையின் கீழ் நிா்ணயிக்கப்பட்டுள்ள விபரங்களைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

ii. பணிப்புரை இலக்கம்46–இந்தப் பணிப்புரையின் கீழ் நிா்ணயிக்கப்பட்டுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரக் கேபில்களை இலங்கைக் கட்டளைகள் கணியகத்தினால் வெளியிடப்பட்டுள்ள எஸ்எல்எஸ் உற்பத்திச் சான்றிதழ் குறியீடு இன்றி மொத்தமாக அல்லது சில்லறையாக உற்பத்தி செய்தல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்வதற்காக காட்டிப்படுத்தல் அல்லது விற்பனை செய்வதற்காக திறந்து வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்வதற்காக சமா்ப்பிப்பதிலிருந்து உற்பத்தியாளா்கள், விநியோகஸ்தா்கள் மற்றும் வியாபாரிகள் தவிா்ந்துகொள்ளச் செயற்படல் வேண்டும்.

iii. பணிப்புரை இலக்கம் 47–இலங்கைக் கட்டளைகள் பணியகத்தினால் வெளியிடப்படுகின்ற எஸ்எல்எஸ் சான்றிதழ் குறியீடு குறித்த பொதியில் தெளிவாக தெரியும் வகையில் மற்றும் வாசிக்கக்கூடிய எழுத்துக்களில்

அச்சிடப்பட்டிருந்தாலன்றி உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற நுளம்புச் சுருள், நுளம்பு மெட் வகைகளை மொத்தமாக அல்லது சில்லறையாக உற்பத்தி செய்தல், விநியோகித்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்வதற்காக காட்டிப்படுத்தல் அல்லது விற்பனை செய்வதற்காக திறந்து வைத்திருத்தல் அல்லது விற்பனை செய்வதற்காக சமர்ப்பிப்பதிலிருந்து உற்பத்தியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வியாபாரிகள் தவிர்ந்துகொள்ளச் செயற்படல் வேண்டும்.

iv. பணிப்புரை இலக்கம் 48 : பொருட்களின் களஞ்சியம், பண்டகசாலை அல்லது பொருட்களைக் களஞ்சியப்படுத்தியுள்ள இடம் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பதிவு செய்யப்பட்டாலன்றி எந்தவொரு பொருட்களின் களஞ்சியம், பண்டகசாலை அல்லது பொருட்களைக் களஞ்சியப்படுத்தியுள்ள இடத்திலும் அல்லது வேறு இடத்திலும் பக்கட்களாக அல்லது மொத்தமாக பால்மாவை களஞ்சியப்படுத்தி வைப்பதிலிருந்து மற்றும் சேகரித்துப் பேணிவருவதிலிருந்து பால்மா உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது விநியோகஸ்தர்கள் தவிர்ந்துகொள்ளல் வேண்டும்.

## ஆ. சட்டத்தின் 20(5) பிரிவுடன் வெளியிடப்பட்டுள்ள பணிப்புரைகள்

i. பணிப்புரை இலக்கம் 24 : கோழி இறைச்சிக்கான உச்ச சில்லறை விலையை நிர்ணயித்தல்.

## இ. குறைந்த தரமுடைய இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களைக் கண்காணித்தல்

குறைந்த தரமுடைய பொருட்கள் நாட்டில் உள்ள நுழைவு இடங்களை வந்தடைவதைத் தவிர்க்கும் பொருட்டு இலங்கை கட்டளைகள் பணியகம் மற்றும் இலங்கை சுங்கம் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறக்குமதி பரிசீலனைத் திட்டத்தின் கீழ் தராதரங்களுடன் இணங்கியொழுகாமை தொடர்பில் இலங்கை கட்டளைகள் பணியகத்தினால் சிபார்சு செய்யப்பட்ட பண்டங்கள் மீள் ஏற்றுமதி செய்யப்படவேண்டிய 207 விடயங்களை அதிகாரசபை கண்காணித்தது.

ஈ. தேசிய மட்டத்திலான குழுக்களைப் பிரதிநிதித்துவம் செய்ததுடன் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கென கொள்கைகள்/சட்டங்கள் தொடர்பில் பங்களிப்புச் செய்துள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, சுகாதார அமைச்சு, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, மின்வலு, எரிசக்தி அமைச்சு, பொருளாதார அபிவிருத்திக்கான தேசியப் பேரவை ஆகியவற்றின் கீழ் இயங்கும் தேசிய மட்ட குழுக்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன் பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்கான கொள்கை மற்றும் சட்டம் தொடர்பாகவும் பங்களிப்புச் செய்கிறது.

**2. ஏமாற்று நடத்தை மற்றும் நியாயமற்ற வர்த்தக பழக்கங்களுக்கு எதிராக பாவனையாளர்களைப் பாதுகாத்தல்**

| மாவட்டம் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---:|---:|
| அம்பாறை | 04 | 72 |
| அநுராதபுரம் | 10 | 236 |
| பதுளை | 02 | 95 |
| மட்டக்களப்பு | 03 | 138 |
| கொழும்பு | 21 | 2157 |
| காலி | 04 | 223 |
| கம்பஹா | 07 | 337 |
| ஹம்பாந்தோட்டை | 05 | 107 |
| யாழ்ப்பாணம் | 01 | 18 |
| களுத்தறை | 03 | 187 |
| கண்டி | 24 | 765 |
| கேகாலை | 10 | 328 |
| குருநாகல் | 14 | 489 |
| மாத்தளை | 10 | 277 |
| மாத்தறை | 08 | 666 |
| மொனராகலை | 05 | 279 |
| நுவரெலியா | 10 | 341 |
| பொலன்னறுவை | 08 | 206 |
| புத்தளம் | 18 | 628 |
| இரத்தினபுரி | 08 | 149 |
| திருகோணமலை | 11 | 515 |
| வவுனியா | 06 | 133 |
| **மொத்தம்** | **192** | **8,346** |

அ. வியாபார சமூகத்திற்கான விழிப்புணர்வு (அறிவூட்டல்)

சிவில் சமூகங்களின் வெளிக்கள நிகழ்ச்சித் திட்டங்களினுடனான விழிப்பூட்டலின் மூலமாக பாதிப்புறும் குழுக்களைப் பாதுகாத்தல், தரமுயர்த்தல், வலுவூட்டுதல் ஆகியவை போட்டித்தன்மையை ஊக்குவிக்கும் மிக பயனுறுதிமிக்க வழியாகும். இது திட்டமிடப்பட்டு, வடிவமைக்கப்பட்ட வர்த்தக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

2013 ஆம் ஆண்டின் போது அதிகாரசபை, வியாபார சமூகத்திற்கென 192 நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது.

**அட்டவணை– 1**–2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட வர்த்தக விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

| | |
|---|---|
|   |  |
| தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி ஓயாமடுவ, அநுராதபுரம். | தேசத்திற்கு மகுடம் தேசிய அபிவிருத்திக் கண்காட்சி ஓயாமடுவ, அநுராதபுரம். |
|  |  |
| கொழும்பு மாவட்ட பெண்கள் அமைப்புக்களின் அங்கத்தவா்களுக்கான செயலமா்வு | பாடசாலை மாணவா்களுக்கான விழிப்புணா்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் |

| | |
|---|---|
|  |  |
| பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | நடமாடும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் |

அ. சந்தை கண்காணிப்பு

சமூகத்தின் வாழ்க்கையில் ஏதேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் அவசியமானது என கௌரவ அமைச்சர் கருதும் பட்சத்தில் அல்லது அதனகத்து, அமைச்சர் அதிகாரசபையுடனான ஆலோசனையுடன் அவரது கட்டளைப்படி, அத்தகைய பண்டங்கள் அல்லது சேவைகளை குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் அல்லது சேவைகளாக அரசாங்க வர்ததமானப் பத்திரிகையில் வெளியிடுமாறு சிபார்சு செய்யப்படும்.

பின்வருவன குறித்துரைக்கப்பட்ட பண்டங்களாகப் பட்டியலிடப்பட்டுள்ளது:

i. சீமெந்து
ii. எரிவாயு
iii. பால்மா
iv. அரிசி
v. கோழி இறைச்சி
vi. கோதுமை மா
vii. வெள்ளைச் சீனி
viii. செத்தல் மிளகாய்
ix. பெரிய வெங்காயம்
x. சின்ன வெங்காயம்
xi. பருப்பு
xii. நெத்தலிக் கருவாடு
xiii. கொண்டல் கடலை
xiv. பாசிப் பயறு
xv. தகரத்திலடைத்த மீன்

சீமெந்து,எரி வாயு, பால்மா, கோழி இறைச்சி மற்றும் அரிசி ஆகியவற்றின் விலையை கண்காணிப்புச் செய்யும் நோக்கத்துடன் கொழும்பு மற்றும் நகரப்புறங்களில் ஒழுங்கான அடிப்படையில் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆ. சந்தை தொடர்பான திடீர் சோதனைகளும் புலனாய்வுகளும்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க,லேபல் ஒட்டுதல் பற்றிய அறிவுறுத்தல்களை மீறுதல், அடையாளமிடப்பட்ட விலைக்கு மேலாக விற்றல், பண்டங்களை விற்பதற்கு இணங்காமை, பண்டங்களை வைத்திருப்பதற்கு இணங்காமை, பண்டங்களைப் பதுக்கி வைத்தல், அதிகாரசபையின் எழுத்து மூலமான முன்னறிவித்தலின்றி சில பொருட்களின் சில்லறை அல்லது மொத்த விலையை அதிகரித்தல், விலைப் பட்டியலைக் காட்சிப்படுத்தாது விடல், கொள்வனவு செய்பவர்களுக்கு பற்றுச்சீட்டு வழங்காமை, உற்பத்தியாளர்கள் / வர்த்தகர்களினால் மேற்கொள்ளப்படும் தவறான அல்லது ஏமாற்று நடவடிக்கை மற்றும் தவறான பிரதிநிதித்துவங்கள் ஆகியவற்றுக்கென திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தவறான வர்த்தகர்கள் மீது சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுவதுடன் சட்டத்தின் 60ஆம் பிரிவில் அனுமதிக்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில் குற்றப்பணம் விதிக்கப்படுகிறது.

இந்த வருடத்தின்போது, அதிகாரசபையானது, சந்தை தொடர்பான 25,287 திடீர் சோதனைகளை மேற்கொண்டிருந்தது. இத்திடீர் சோதனைகள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் தலைமை அலுவலக அதிகாரிகளினாலும் மாவட்ட பிரிவுடன் இணைந்துள்ள அதிகாரிகளினாலும் மேற்கொள்ளப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியமைக்காக தவறிழைத்த வர்த்தகர்கள் மீது நீதிமன்றினால் விதிக்கப்பட்ட தண்டப்பணத் தொகை ரூபா. 84.7 மில்லியனாகும்.

சந்தை தொடர்பான திடீர் சோதனைகளின் முன்னேற்றம் மற்றும் நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட குற்றப்பணம் ஆகியவை அட்டவணை 2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2** –சந்தை தொடர்பான திடீர் சோதனைகளின் முன்னேற்றம் மற்றும் விதிக்கப்பட்ட குற்றப்பணம்


| மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட குற்றப்பணம் ரூபாவில் |
|---|---|---|---|
| சந்தை தொடர்பான திடீர் சோதனைகளும் புலனாய்வுகளும்<br><br>அ.10ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான திடீர் சோதனைகள் மற்றும் புலனாய்வுகள் (*10 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளை மீறுதல்*) | 3,736 | 3,212 | 11,573,941 |

| | | | |
|---|---|---|---|
| ஆ.11ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*அடையாளமிடப்பட்ட விலையிலும் பார்க்க கூடிய விலையில் விற்றல்*) | 2,586 | 2,280 | 8,459,268 |
| இ.12ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தராதரங்களுடன் இணங்கியொழுகாமை*) | 173 | 162 | 559,000 |
| மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் (இலக்கு) | திடீர் சோதனைகளின் எண்ணிக்கை | வழக்குகளின் எண்ணிக்கை | விதிக்கப்பட்ட குற்றப்பணம் ரூபாவில் |
| ஈ.15ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் | 08 | 07 | 25,500 |
| உ.16ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*ஏதேனும் பண்டங்களை வைத்திருப்பதற்கு இணங்காமை*) | 10 | 05 | 119,500 |
| ஊ.17ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*பண்டங்களை பதுக்கி வைத்தல்*) | 01 | - | - |
| எ.18ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*அதிகூடிய சில்லறை விலையை மீறுதல்*) | 08 | 02 | 3,000 |
| ஏ.20ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் | 526 | 483 | 1,665,400 |
| ஐ.26ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*விலைப் பட்டியலை காட்சிப்படுத்தாமை*) | 9,130 | 8,845 | 25,414,512 |
| ஒ.28ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*வர்த்தகர்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு பற்றுச்சீட்டை வழங்குதல்*) | 19 | 18 | 67,500 |
| ஓ.30ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தவறாக வழிநடத்தும் அல்லது ஏமாற்றும் நடத்தை*) | 4,133 | 3,507 | 16,684,450 |
| ஔ.30ஆம், 31ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*தவறாக வழிநடத்தும் பொய்யான பிரதிநிதித்துவம்*) | 2,880 | 2,313 | 9,304,929 |


| | | | |
|---|---|---|---|
| க.31ஆம் பிரிவின் கீழ் சந்தை தொடர்பான புலனாய்வுகள் (*பொய்யான பிரதிநிதித்துவம்*) | 2,077 | 1,897 | 10,810,700 |
| **மொத்தம்** | **25,287** | **22,731** | **84,687,700** |

திடீர் சோதனைகள் தவிர தொடுக்கப்பட்ட நீதிமன்ற வழக்குகளின் எண்ணிக்கை 67 ஆக இருந்ததுடன் அதிகாரசபை தண்டப்பணமாக ரூபா. 338,000/- வை சேகரித்திருந்தது.

**பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகள் - 2013**




**பாவனையாளர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட தண்டப்பணங்கள் - 2013**





இரும்புக்கம்பிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை



வர்ணம் கலக்கப்பட்ட வெள்ளை அரிசி



மிளகாய் தூளுடன் ஆடைகளுக்குப் பயன்படுத்தும் வர்ணம் கலக்கப்பட்டுள்ளமை.



காலாவதியான ரின்மீன்களின் காலாவதியாகும் திகதியை மாற்றியமைப்பதற்கு செயற்படுகையில் கண்டுபிடிக்கப்பட்ட மாதிரிகள்




அசல் மற்றும் போழியான சிகை வர்ணங்களின் மாதிரிகள்



காபைட் பூசப்பட்ட பழங்கள்

3. நியாயமற்ற வர்த்தக நடவடிக்கைகளினால் பாதிப்புறும் பாவனையாளர்களுக்கு நிவாரணமளித்தல்

அ. பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுதல்

சட்டத்தின் 13ஆம் மற்றும் 32ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பாவனையாளர் முறைப்பாடுகளில் தலையீடு செய்கிறது. உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர்களினால் வழங்கப்பட்ட உறுதிமொழி அல்லது உத்தரவாதத்திற்கு அமைவாக நடைபெறாத பண்டங்களின் விற்பனை அல்லது சேவை வழங்கல் தொடர்பிலான முறைப்பாடுகளை அதிகாரசபை விசாரணை செய்ய முடியும்.

2013ஆம் ஆண்டின்போது,1387 முறைப்பாடுகள் அதிகாரசபைக்குக் கிடைக்கப் பெற்றிருந்ததுடன் இரு தரப்பினர்களினதும் திருப்தியுடன் 565 முறைப்பாடுகள் முடிவுறுத்தப்பட்டன. மாவட்ட பிரிவுகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட பாவனையாளர்களின் முறைப்பாடுகள் 19 ஆகும். 427 முறைப்பாடுகள் சந்தை தொடர்பான திடீர் சோதனைகளுக்கென ஆற்றுப்படுத்தப்பட்ட2.

2013 ஆம் ஆண்டின்போது பாவனையாளர் முறைப்பாடுகளைக் கையாளுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே உள்ள அட்டவணை 3 மற்றும் 4 ஆகியவற்றில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை– 3**

2013 ஆம் ஆண்டின்போது கையாளப்பட்ட பாவனையாளர் முறைப்பாடுகள்

| | |
|---|---|
| கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை | 1,387 |
| ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை* | 129 |
| திடீர் சோதனைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை* | 427 |
| முடிவுறுத்தப்பட்டவை* | 565 |
| நிராகரிக்கப்பட்டவை* | 37 |
| கலந்தாராய்வுகள் மேற்கொள்ளப்பட்டவை* | 455 |

*இந்த எண்ணிக்கையில் கடந்த ஆண்டு தீர்க்கப்படாது இந்த ஆண்டுக்கு முன்கொண்டுவரப்பட்ட முறைப்பாடுகளும் உள்ளடங்குகின்றன.

**அட்டவணை– 4 –**பாவனையாளர் முறைப்பாடு தொடர்பில் நடாத்தப்பட்ட விசாரணைகள்:

| மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை | எண்ணிக்கை |
|---|---|
| விசாரணை நடைபெற்றது | 137 |
| விசாரணைகள் தீர்த்துவைக்கப்பட்டது | 13 |
| கட்டளைகள் வழங்கப்பட்டது | - |
| கலந்தராய்வுகள் மேற்கொள்ளப்பட்டது (விசாரணையின் முன்) | 49 |

பிரதிவாதிகள் இணங்கியொழுகாமையினால் கட்டளைகளை அமுல்படுத்துவதற்கென அதிகாரசபை நீதவான் நீதிமன்றில் 67 வழக்குகளைத் தொடுத்துள்ளது.

4. பாவனையாளர் கல்வி மற்றும் வலுவூட்டல்

அ. பாவனையாளர் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகம், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகள், கண்காட்சிகள் ஆகிய ஏனையவற்றை உபயோகித்து பாவனையாளர் உரிமைகள் மற்றும் பொறுப்புகள், தற்போதைய பாவனையாளர் சட்டம், சிறந்த பாவனையாளர் விழுமியங்கள், சிறந்த வியாபார நடவடிக்கைகள் போன்ற பல விடயங்களைப் பற்றி பொதுமக்களுக்கு கல்வி அறிவூட்டுகிறது. மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக பாவனையாளர் குழுமங்கள் மற்றும் வியாபார சமூகங்கள், ஆகியவற்றின் பங்களிப்புடன் பாவனையாளர் உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. பாவனையார் உரிமைகள், சட்டத்தின் விதிகள், மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியன பற்றி நாடு பூராகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

2013 ஆம் ஆண்டின்போது, அதிகாரசபையானது பொதுமக்களை அறிவுறுத்தும் பாவனையாளர் அறிவுறுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் 217 ஐயும், பாடசாலை மாணவர்கள் அறிவுறுத்துவதற்காக 126 நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தியுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பாவனையாளர் அிகாரசபையின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்டப் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மேலதிகமாக, பொதுமக்களுக்கு கல்வி அறிவூட்டுவதற்கென பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை 02 கண்காட்சி மற்றும் வர்த்தக கண்காட்சிகளுக்கும் பங்களிப்பை வழங்கியுள்ளது. பொதுமக்களுக்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம், பாவனையாளர் அமைப்புகளைத் தாபித்தல், பாடசாலைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், பாடசாலை பாவனையாளர் கழகங்களைத் தாபித்தல், கண்காட்சிகள் ஆகியவை அட்டவணை 5-9 வரை காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை– 5** –பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அம்பாறை | 07 | 152 |
| அநுராதபுரம் | 08 | 200 |
| பதுளை | 08 | 293 |
| மட்டக்களப்பு | 09 | 363 |
| கொழும்பு | 37 | 10745 |
| காலி | 08 | 1425 |
| கம்பஹா | 04 | 375 |
| ஹம்பாந்தோட்டை | 07 | 953 |
| யாழ்ப்பாணம் | 04 | 117 |
| களுத்தறை | 07 | 166 |
| கண்டி | 09 | 641 |
| கேகாலை | 12 | 1093 |
| குருநாகல் | 15 | 705 |
| மாத்தளை | 08 | 303 |
| மாத்தறை | 09 | 275 |
| மொனராகலை | 02 | 428 |
| நுவரெலியா | 09 | 250 |
| பொலன்னறுவை | 07 | 2706 |
| புத்தளம் | 11 | 1805 |
| இரத்தினபுரி | 13 | 544 |
| திருகோணமலை | 15 | 365 |
| வவுனியா | 08 | 188 |
| **மொத்தம்** | **217** | **24,098** |

**அட்டவணை– 6**

பாவனையாளர் அமைப்புகளைத் தாபித்தல்

| மாவட்டம் | தாபிக்கப்பட்ட அமைப்புக்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட தாபனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அம்பாரை | 01 | 27 |
| மட்டக்களப்பு | 01 | 36 |
| கொழும்பு | 03 | 146 |
| இரத்தினபுரி | 01 | 25 |
| திருகோணமலை | 02 | 66 |
| மாத்தளை | 01 | 15 |
| வவுனியா | 01 | 19 |
| **மொத்தம்** | **10** | **334** |

**அட்டவணை– 7**

பாடசாலைகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்

| மாவட்டம் | மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பங்குபற்றுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அம்பாறை | 12 | 309 |
| அநுராதபுரம் | 02 | 40 |
| பதுளை | 03 | 1,348 |
| மட்டக்களப்பு | 14 | 514 |
| கொழும்பு | 25 | 3,247 |
| காலி | 01 | 150 |
| கம்பஹா | 01 | 118 |
| யாழ்ப்பாணம் | 05 | 214 |
| களுத்தறை | 04 | 167 |
| கண்டி | 02 | 275 |
| கேகாலை | 10 | 1,672 |
| குருநாகல் | 09 | 1,216 |
| மாத்தளை | 02 | 71 |
| மாத்தறை | 04 | 239 |
| மொனராகலை | 02 | 99 |
| நுவரெலியா | 01 | 146 |
| புத்தளம் | 14 | 1,711 |
| இரத்தினபுரி | 05 | 430 |
| திருகோணமலை | 07 | 422 |
| வவுனியா | 03 | 92 |
| **மொத்தம்** | **126** | **12,480** |

**அட்டவணை– 8**

பாடசாலை பாவனையாளர் கழகங்களைத் தாபித்தல்

| மாவட்டம் | தாபிக்கப்பட்ட பாவனையாளர் கழகங்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட பாவனையாளர் கழகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கொழும்பு | 20 | 2,158 |
| இரத்தினபுரி | 01 | 165 |
| திருகோணமலை | 08 | 502 |
| வவுனியா | 02 | 58 |
| **மொத்தம்** | **31** | **2,883** |

**அட்டவணை– 9**

கண்காட்சிகள்

| மாவட்டம் | செயற்பாட்டின் வகை | பார்வையாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| காலி | காமினி மகா வித்தியாலயம், காலி | 2000 |
| கொழும்பு | தேசத்திற்கு மகுடம் தேசிய கண்காட்சி அம்பாரை, ஓயாமடுவ | 650,000 |
| | **மொத்தம்** | **652,000** |

## 5. எதிர்மறையான போட்டித்தன்மைமிக்க வர்த்தக நடவடிக்கைகளிலிருந்து வர்த்தகர்களையும் உற்பத்தியாளர்களையும் பாதுகாத்தல் மற்றும் ஆரோக்கியமான போட்டிகளை ஊக்குவித்தல்

அ. போட்டித்தன்மையை ஊக்குவித்தல்

2013 ஆம் ஆண்டில் அதிகாரசபைக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் குற்றஞ்சாட்டப்பட்ட போட்டித்தன்மைக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்பில் 26 புலனாய்வுகளை அதிகாரசபை மேற்கொண்டிருந்தது. மேலும், இம்முறைப்பாடுகளில் 16 முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட்டு அக்காலப்பகுதியில் தீர்த்துவைக்கப்பட்டிருந்த வேளையில் 07 முறைப்பாடுகள் பாவனையாளர் அலுவல்கள் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன.

முறைப்பாடுகளை தவிர,அப்பியாசப் புத்தகங்களுக்கான சந்தையில் ஏதேனும் சாத்தியப்படக்கூடிய போட்டிக்கு எதிரான நடைமுறைகளை இனங்காணுவதற்கென அதிகாரசபை தனது பூர்வாங்க (ஆரம்ப கட்ட) ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளது.

மேலும் தற்போது காணப்படுகின்ற சிக்கல்கள் மற்றும் அவை பொருட்களின் விலைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பது பற்றிய விசேட ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. கைத்தொழில் எரிவாயு சிலிண்டர், மருத்துவ எரிவாயு சிலிண்டர் போன்றவற்றின் மீதான விசேட வியாபாரப் பண்ட வரி மற்றும் சில்லிறை சந்தையில் அதன் தாக்கம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வும் இதில் உள்ளடங்கும். அத்தியாவசியப் பொருட்களுக்கான உற்பத்தி பற்றிய பக்கத்தோற்றமொன்றுத் தயார் செய்யப்பட்டது.

சந்தைப் பங்கினை இனங்காணல் மற்றும் புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரித்தல்

சந்தையில் அல்லது சந்தையின் பெரும்பகுதியில் நடைபெறும் வர்த்தகம் தொடர்பாக ஆதிக்கஞ் செலுத்தும் நிலையினை தவறாகப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துதல் அல்லது ஒழிப்பது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பாகும். உள்ளூர் சந்தையில் கிடைக்கப்பெறும் தெரிவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் மற்றும் ஆதிக்கஞ் செலுத்தும் நிலைமையினை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பாக தொழில் முயற்சிகளின் சந்தைப் பங்கினை இனங்காண்பதற்கென புள்ளிவிபரவியல் தரவுகள் சேகரிக்கப்படுகின்றன.

சந்தை ஆதிக்கத்துக்கான சாத்தியக்கூற்றை ஆராயும் நோக்கில் 29 உற்பத்திப் பொருட்களின் சந்தைப் பங்கினை கணிப்பீடு செய்தல் பற்றி அதிகாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. போட்டித்தன்மையற்ற பண்டங்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக சந்தையை இனங்காணுதல் மிக முக்கியமானதாகும்.

அத்தியாவசியப் பண்டங்கள் மீதான 18 விலைப் பேணுகையை அதிகாரசபை மேற்கொண்டுள்ளது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கண்காணிப்புச் செய்யும் நோக்கத்துடன் கொழும்பு மற்றும் ஏனைய மாவட்டங்களில் விலைப் பேணுகை அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்றது.

உணவுப் பண்டங்கள், மரக்கறிகள் மற்றும் மீன் ஆகியவற்றின் நாளாந்த சந்தை விலையின் அடிப்படையில், விலைப் பகுப்பாய்வு அறிக்கைகள் நாளாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்றது. அவ்வாறான 556 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

போட்டியை ஊக்குவிப்பதற்கென வலுவூட்டல் வர்த்தக நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இக்காலப்பகுதியில் 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆ. உள்ளூர் கைத்தொழில்களைப் பாதுகாத்தல்

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு உச்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் நடவடிக்கைகளும் அமுல்படுத்தப்பட்டன. போட்டித்தன்மைக்கான சமமான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இறக்குமதி செய்யப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உச்ச சில்லறை விலையைக் குறிப்பிடுவது உகந்ததெனக் கருதப்படுகின்ற சில உற்பத்திகள் தொடர்பாக கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுகின்றது.

இனிப்புப் பண்டங்கள், சொக்கலேட்டுகள், பிஸ்கட்டுகள், கேக் மற்றும் சவர்க்காரம் ஆகியவற்றின் இறக்குமதியாளர்கள் தமது அதிஉச்ச சில்லறை விலை பற்றிய வெளிப்படுத்துகைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்பி வைக்கின்றனர். வெளிப்படுத்தப்பட்ட அதிஉச்ச சில்லறை விலையை அடிப்படையாகக் கொண்டு செஸ் வரியானது சுங்கத் திணைக்களத்தினால் விதிக்கப்படுகிறது. வெளிப்படுத்தப்பட்ட விலைகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றமையை உறுதி செய்வதற்கென இந்த உற்பத்திப் பொருட்களின் மீது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வெளிப்படுத்துகையின் பேரில், சந்தை தொடர்பான பரிசீலனை ஒழுங்காக மேற்கொள்ளப்படுகிறது. இக்காலத்தின்போது 291 விண்ணப்பங்கள் தொடர்பக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இ. நியாயமான விலையை உறுதிசெய்தல்

அ. குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் விலையை ஒழுங்குபடுத்தல்

சட்டத்தின் 18,19 மற்றும் 20 ஆம் பிரிவுகளில் அளிக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட பண்டங்களின் சந்தை விலை தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தலையீடு செய்கிறது. தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் விலைகளை உறுதி செய்வதற்கு / நிலையாக வைத்திருப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழேயுள்ள அட்டவணை 10 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை– 10**–தெரிவு செய்யப்பட்ட பண்டங்களின் விலைகளை உறுதி செய்வதற்கு / நிலையாக வைத்திருப்பதற்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

| வியாபாரப் பண்டம் | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை |
|---|---|
| சீமெந்து | சீமெந்து கம்பனிகளால் விடுக்கப்படட கோரிக்கையைப் பரிசீலித்து 10 வகையான சீமேந்துகளின் அதிஉச்ச சில்லறை விலை அதிகரிக்கப்பட்டது. |
| கோழி இறைச்சி | சட்டத்தின் 20(5) பிரிவின் கீழ் 2013 மே மாதம் 20 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோழி இறைச்சிக்கான உச்ச சில்லறை விலை திருத்தியமைக்கப்பட்டதுடன், அதற்கமைய புதிய விலைகள் பின்வருமாறாகும் :<br>• தோளுடன் 1 கிலோ கிறாம் கோழி இறைச்சியின் விலை (பூரணமாக அல்லது பகுதிபகுதிகளாக) – வியாபாரக் குறியீட்டுடன் விற்பனை செய்யும் போது : ரூபா380.00<br>• தோளுடன் 1 கிலோ கிறாம் கோழி இறைச்சியின் விலை (பூரணமாக அல்லது பகுதிபகுதிகளாக) – வியாபாரக் குறியீடு இன்றி விற்பனை செய்யும் போது : ரூபா 370.00 |
| எரிவாயு | இரண்டு பிரதான எரி வாயு கம்பனிகளுக்கு அனுமதியளிக்கப்பட்ட அதிகூடிய சில்லறை விலைகள் கீழே தரப்பட்டுள்ளன.<br>• லிற்றோ வாயு – 12.5 கிலோ சிலிண்டரின் விலை ரூபா 2,396/- (கொழும்பு)<br>2.3 கிலோ சிலிண்டரின் விலை ரூபா 470/- (கொழும்பு)<br>• லாப் வாயு – 12.5சிலிண்டரின் விலை ரூபா 2,396/- (கொழும்பு) |

ஏனைய செயற்பாடுகள்

| | |
|---|---|
| பால்மா களஞ்சியங்களைப் பதிவு செய்தல் | 2014 டிசம்பர் 27 ஆம் திகதி பால்மா பதிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. |
| மருந்துப்பொருட்கள் | பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய " மருந்துகளை" அத்தியாவசியப் பொருட்களாக சிபாரிசு செய்வதற்கான ஆரம்ப கற்கையொன்றை மேற்கொள்ளப்பட்டது. |

இ. தாபனத்தின் இயலளவை மேம்படுத்துதல்

அ. பணியாட்களின் மேம்பாடு

எமது சேவைகளின் தரத்தை உயர்த்துவதில் பங்களிப்புச் செய்யும் முதலீடாகக் கருதப்படுகின்ற பணியாட்களை அவர்களின் சம்பந்தப்பட்ட துறையில் மேம்படுத்துவது தொடர்பாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை பரிசீலிக்கிறது. 2013 ஆம் ஆண்டின் நடாத்தப்பட்ட பணியாட்களின் பயிற்சி நிகழச்சித்திட்டங்களின் விபரங்கள் கீழே உள்ள அட்டவணை 12 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை– 12

2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பணியாட்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

| # | பாடநெறியின் தலைப்பு | பங்கேற்றோர் |
|---|---|---|
| 01 | வியாபாரம் மற்றும் முதலீட்டைப் போசிப்பது தொடர்பில் போட்டித்தன்மையின் வகிபாகம்" பற்றி நடாத்தப்பட்ட 3 ஆவது சர்வதேச கருத்தரங்கு | 01 |
| 02 | அடிப்படை புள்ளிவிபரவியல் | 03 |
| 03 | ஆரோக்கியமிக்க வாழ்க்கை முறையொன்றுக்குப் பழகிக்கொள்வது பற்றி அரச துறையின் உயர் மட்ட மற்றும் நடுத்தர மட்ட முகாமையாளர்களின் ஆற்றல்களை வளர்த்தல் | 02 |
| 04 | Excel இனைப் பயன்படுத்தி நிதியியல் மாதிரியமைப்புக்கள் பற்றிய CIMA Master பாடநெறி | 01 |
| # | பாடநெறியின் தலைப்பு | பங்கேற்றோர் |
| 05 | மலேசியாவில் நடாத்தப்பட்ட பாவனையாளர் கல்வி நிகழ்ச்சித்திட்டம் | 01 |
| 06 | முகாமைத்துவ உதவியாளர்களின் அபிவிருத்தி | 04 |
| 07 | சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களுக்காக நடாத்தப்பட்ட சரியனா மனப்பாங்கு மற்றும் ஊக்குவிப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம் | 02 |
| 08 | ஹலால் தரநியமங்கள், ஹலால் விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஹலால் உற்பத்திகளை விற்பனை செய்வது தொடர்பாக நடாத்தப்பட்ட சர்வதேச கருத்தரங்கு | 01 |

| # | பாடநெறியின் தலைப்பு | பங்கேற்றோர் |
|---|---|---|
| 09 | ஆவணவாக்கல் பற்றிய நடைமுறைகள் | 01 |
| 10 | பயன்மிக்க ஆட்களுக்கு இடையிலான திறமைகள் பற்றிய கருத்தரங்கு | 01 |
| 11 | செயலாளர்கள் மற்றும் வரவேட்பு அலுவலர்களுக்கான பயிற்சி | 01 |
| 12 | இலங்கை நிதி அறிக்கையிடல் தரநியமங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஒரு நாள் கருத்தரங்கு | 01 |
| 13 | உற்பத்தித்திறன் கருவியாக Super 5 எனும் 5 “ S” முறை | 01 |
| 14 | சேவையை நிறைவு செய்யும் போது கிடைக்கும் பயன்கள் | 01 |
| 15 | சம்பள முகாமைத்துவம் மற்றும் சம்பள பரிமாற்றங்கள் பற்றிய பயிற்சி | 02 |
| 16 | புலமைச் சொத்துக்களுக்கு வரவேற்பை ஏற்படுத்துவதற்கான WIPO பிராந்திய செயலமர்வு | 01 |
| 17 | சாரதிகளுக்கான செயலமர்வு | 04 |
| 18 | ஒழுக்காற்று முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | 02 |
| 19 | ஏற்றுமதி, இறக்குமதி நடைமுறைகள் பற்றிய செயலமர்வு | 01 |
| 20 | போக்குவரத்து முகாமைத்துவம் பற்றிய செயலமர்வு | 01 |

ஆ. அதிகாரசபையின் பணியாட்களைப் பலப்படுத்தல்

| சம்பளக் குறியீடு | பதவிநிலை | 2011.05.19 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2013.12.31 இல் உள்ளவாறு தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **எச்எம் 2-1** | **சிரேட்ட முகாமையாளர்** | | | |
| **எச்எம் 1-1** | பணிப்பாளர் நாயகம் | 1 | 1 | 0 |
| | பணிப்பாளர் | 6 | 5 | 1 |
| | பேரவைச் செயலாளர் | 1 | 1 | 0 |
| **எம்எம் 1-1** | **முகாமையாளர்** | | | |
| | உள்ளகக் கணக்காய்வாளர் | 1 | 1 | 0 |
| | பிரதிப் பணிப்பாளர் | 15 | 5 | 7 |
| | உதவிப் பணிப்பாளர் | | 3 | |
| | பிரதி/ உதவிப் பணிப்பாளர் - பிராந்தியம் | 9 | 0 | 9 |

| சம்பளக் குறியீடு | பதவிநிலை | 2011.05.19 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 2013.12.31 இல் உள்ளவாறு தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **ஜேஎம் 1-1** | **கனிஷ்ட முகாமையாளர்** | | | |
| | கணக்காய்வு அலுவலர் | 2 | 0 | 2 |
| | முறைமை நிருவாகி | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட புலனாய்வு அலுவலர் | 27 | 15 | 12 |
| | சிரேஷ்ட புள்ளிவிபர அலுவலர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சந்தை வளப் பகுப்பாய்வாளர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட கணக்கீட்டு அலுவலர் | 2 | 1 | 1 |
| | அந்தரங்க செயலாளர் (பணிப்பாளர் நாயகம்) | 1 | 0 | 1 |
| | அந்தரங்க செயலாளர் (தவிசாளர்) | 1 | 1 | 0 |
| | சிரேஷ்ட நிருவாக/ மனிதவள அலுவலர் | 1 | 0 | 1 |
| | சிரேஷ்ட சட்டஅமுலாக்கல் அலுவலர் | 2 | 2 | 0 |
| | சிரேஷ்ட கிரய அலுவலர் | 1 | 0 | 1 |
| **எம்ஏ 5-2** | **அமுலாக்கல்/ நடவடிக்கை/ விரிவாக்கல்** | | | |
| | தரவு ஒருங்கிணைப்பாளர் | 1 | 0 | 1 |
| | புள்ளிவிபரவியல் அலுவலர் | 1 | 1 | 0 |
| | சந்தை வளப் பகுப்பாய்வாளர் | 1 | 1 | 0 |
| | ஆவணமாக்கல் அலுவலர் | 6 | 0 | 6 |
| | நூலகர் | 1 | 0 | 1 |
| | கிரய அலுவலர் | 15 | 3 | 10 |
| | கணக்கு அலுவலர் | | 9 | |
| | நிருவாக அலுவலர் | 5 | 5 | 0 |
| | சட்ட அமுலாக்கல் அலுவலர் | 3 | 3 | 0 |
| | விசாரணை அலுவலர் | 200 | 165 | 35 |
| **எம்ஏ 2-2** | **முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பவியல்** | | | |
| | கணக்கு பதியுநர் | 1 | 0 | 1 |
| **எம்ஏ 1-2** | **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பவியல் அல்லாதவர்)** | | | |
| | முகாமைத்துவ உதவியாளர் | 31 | 22 | 9 |

| சம்பளக் குறியீடு | பதவிநிலை | 2011.05.19 இல் உள்ளவாறு அங்கீகரிக் கப்பட்ட பதவியணி | 2013.12.31 இல் உள்ளவாறு தற்போதைய பதவியணி | வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| **பிஎல் 3** | **ஆரம்ப மட்ட தேர்ச்சியுடையவர்கள்** | | | |
| | சாரதி | 18 | 17 | 1 |
| **பிஎல் 1** | **ஆரம்ப மட்ட தேர்ச்சியற்றவர்கள்** | | | |
| | அலுவலக உதவியாளர் | 14 | 14 | 0 |
| | **மொத்தம்** | **370** | **275** | **96** |

இ. பணியாட்களை ஊக்குவித்தல் மற்றும் பணியாட்களின் நலன்புரி

இந்த வருடத்தின்போது, பணியாட்களுக்கு மனோரம்யம் மற்றும் சாதகமான தொழில் புரியும் சூழலை வழங்குவதற்கென மருத்துவ காப்புறுதிச் சேவை, கலாசார மற்றும் சமய நிகழ்ச்சித்திட்டங்கள், பணியாளர் ஊக்குவிப்புத் திட்டம், பணியாளர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், பணியாளரை அங்கீகரித்தல் ஆகிய பல்வேறு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

ஈ. பாவைனயாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்திற்கான திருத்தங்கள்

சட்ட மாஅதிபா் திணைக்களத்திடமிருந்து கிடைத்துள்ள திருத்தங்களின் இறுதி வரைவு பரிசீலிக்கப்பட்டு மீண்டும் சட்ட மாஅதிபா் திணைக்களத்திற்கு அனுப்பப்படவுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் பேரவை – 2013

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் பேரவையானது நிருவாக ரீதியாகப் பணிபுரிகிறது. குறிப்பாக, போட்டித்தன்மைக்கு எதிரான நடைமுறைகள் பற்றிய விடயங்கள் தொடர்பாக அதிகாரசபையினால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்களை விசாரித்து, தீர்மானிப்பதற்கான தத்துவங்களும் அதற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், மிகை விலையிடல், சந்தை பூரணத்துவமின்மை மற்றும் சந்தை கையாளுகைகள் ஆகிய விடயங்களும் புலனாய்வுகளுக்கென பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்படுகிறது. விற்பனை செய்யப்படும் பண்டங்கள் அல்லது வழங்கப்படும் சேவைகளின் விலைகள் பற்றிய உச்ச வரம்பிடலைச் சிபார்சு செய்வதற்கும் பேரவைக்குத் தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள்/ஆற்றுப்படுத்துகைகள்

| பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் பிரிவு | முறைப்பாடுகள்/ ஆற்றுப்படுத்துகைகளின் எண்ணிக்கை | தீர்த்துவைக்கப்பட்டவைகள்/ தீர்மானிக்கப்பட்டவைகள் தீர்ப்புகள்/சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| பிரிவு 38 போட்டித்தன்மைக்கு எதிரான நடவடிக்கைகள் | 6 | 6 |
| பிரிவு 19 பொருட்கள் மற்றும் சேவைகளின் உச்ச சில்லறை விலையை சிபாரிசு செய்தல் | 1 | 2 |
| பிரிவு 19 மற்றும் 22 பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு உச்ச சில்லறை விலையை நிர்ணயிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்படும் புலனாய்வுகள் | 3 | - |

விசேட பணியொன்றாக 1977 கருத்திட்டத்தின் அன்றாட நடவடிக்கைகளைக் கண்காணிப்புச் செய்வதும் பேரையினால் மேற்காள்ளப்படுகின்றது.

- விலைகளைப் பரிசோதித்து பொருட்களின் விலைப் பட்டியல்களை இற்றைப்படுத்தல்
- பாவனையாளர்களின் முறைப்பாடுகளின் பொழிப்புரைகளைப் பரிசீலித்தல்
- கட்டமைப்பானது இலகுவாகவும், பாவனையாளர்களுக்கு சாதகமானவாறும் இயங்கி வருகின்றதா என்பதைக் கண்காணிப்புச் செய்தல்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிநிலைமைக் கூற்று

| | 2013.12.31 இல் உள்ளவாறு இலங்கை ரூபா **000’** | 2013.12.31 இல் உள்ளவாறு இலங்கை ரூபா **000’** |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசும் காசுக்குச் சமனானவையும் | 10,775 | 9,865 |
| வர்த்தகம் ஏனைய பெறுகைகள் | 21,724 | 18,579 |
| பொருட்பதிவேடு/ கையிருப்புகள் | 1538 | 1,117 |
| ஏனைய நடைமுறை நிதிச்சொத்துகள் | 14,759 | 6,492 |
| | 48,795 | 36,053 |
| தொடரும் வேலைகள் (தொட்டறிய முடியாச் சொத்துக்கள்) | 1,421 | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | |
| முதலீடு | 145,371 | 125,239 |
| ஏனைய நடைமுறையற்ற நிதிசார் சொத்துகள் (ஊழியர் கடன்) | 8,254 | 6,089 |
| பிற்போடப்பட்ட ஊழியர் செலவு | - | 2,350 |
| விற்பனைக்கென வகைப்படுததப்பட்ட சொத்துகள் | - | 324 |
| குத்தகைக் கட்டடம் | 925 | 950 |
| ஆதனம், பொறி, உபகரணம் | 57,777 | 69,063 |
| | 212,328 | 204,016 |
| | | |
| **மொத்த சொத்துகள்** | **261,123** | **240,069** |
| | | |
| **பொறுப்புகள்** | | |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | |
| அட்டுறு செலவினங்கள் | 16,025 | 19,651 |
| செலுத்தப்பட வேண்டியவைகளும் ஏனைய பொறுப்புகளும் | 5,435 | 3,321 |
| | 21,461 | 22,972 |
| நடைமுறையல்லாப் பொறுப்புகள் | | |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 21,458 | 17,833 |
| | | |
| **மொத்த பொறுப்புகள்** | 42,919 | 40,805 |
| | | |
| **மொத்த தேறிய சொத்துகள்** | **218,204** | **199,264** |
| | | |
| தேறிய சொத்துகள்/ உரிமையான்மை | | |
| திரண்ட நிதி | 63191 | 63,191 |
| பிற்போடப்பட்ட வருமானம் | 57,517 | 70,337 |
| ஒதுக்கங்கள் | 98,917 | 65,736 |
| | **219,625** | **199,264** |
| **மொத்த தேறிய சொத்துகள்/ உரிமையான்மை** | **219,625** | **199,264** |

நிதி பணிப்பாளர்
பா.அ.அ.

பணிப்பாளர் நாயகம்
பா.அ.அ.

தவிசாளர்
பா.அ.அ.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| | 2013.01.01 இல் உள்ளவாறு இலங்கை ரூபா 000’ | 2013.01.01 இல் உள்ளவாறு இலங்கை ரூபா 000’ |
|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம்** | | |
| மீண்டுவரும் கொடை | 226,408 | 159,222 |
| தண்டப்பண வருமானம் | 28,513 | 34,529 |
| ஏனைய வருமானம் | 32,628 | 21,717 |
| | **287,549** | **215,468** |
| **செலவினங்கள்** | | |
| தனிப்பட்ட ஊதியங்கள் | 139,879 | 116,122 |
| பிரயாணம் | 12,172 | 9,664 |
| வழங்கல்கள் மற்றும் நுகரப்படுபவைகள் | 11,417 | 11,055 |
| பராமரிப்பு | 6,674 | 4,364 |
| ஒப்பந்த சேவைகள் | 38,691 | 39,233 |
| தேய்மானம் | 17,557 | 11,680 |
| ஏனைய செயற்பாட்டு செலவினங்கள் | 28,087 | 17,518 |
| நிதிச் செலவினங்கள் | 107 | 128 |
| சொத்துக்களை அகற்றுவதிலிருந்தான மிகை/ (குறை) | (148) | 1,061 |
| **மொத்தச் செலவினங்கள்** | **254,732** | **208,702** |
| | | |
| **குறித்த காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை)** | **32,817** | **6,766** |

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை

2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்துக்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2013 இலங்கை ரூபா 000' | 2013 இலங்கை ரூபா 000' |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| சாதாரண செயற்பாடுகளிலிருந்து மிகை/ (குறை) | **32,965** | **5,704** |
| சொத்து விற்பனை மூலம் இலாபம் / (நட்டம்) | (148) | 1,062 |
| **சீராக்கல்கள்** | | |
| தேய்மானம் | 17,556 | 11,680 |
| பணிக்கொடை வழங்கலில் அதிகரிப்பு | 3,625 | 3,706 |
| தவணை முறைக் கடன் கரைப்பு | 25 | 25 |
| **செயற்படு மூலதனம் மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **54,023** | **22,177** |
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | (1,510) | 1,051 |
| ஏனைய நடைமுறைச் சொத்துகளில் அதிகரிப்பு | (11,831) | 21,404 |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **40,682** | **44,632** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (6,223) | (53,014) |
| தொட்டறியமுடியாச் சொத்துக்களின் அதிகரிப்பு | 1,421 | |
| பொறி மற்றும் உபகரணங்களின் விற்பனையிலிருந்து தொடருகைகள் | 275 | 1,831 |
| முதலீடுகளின் அதிகரிப்பு | (20,132) | (50,819) |
| நீண்டகால கடன்களின் அதிகரிப்பு | 185 | 1,952 |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்** | **(27,316)** | **(100,050)** |
| | | |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | (13,770) | 33,978 |
| பாவனையாளர் பாதுகாப்பு நிதி / ஒதுக்கம் | 1,314 | 7,785 |
| **நிதியிடல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்** | **(12,456)** | **41,763** |
| | | |
| **காசும் காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | 910 | (13,655) |
| **காலப்பகுதி ஆரம்பத்தில் காசும் காசுக்குச் சமமானவையும்** | 9,865 | 23,520 |
| **காலப்பகுதி முடிவில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **10,775** | **9,865** |

## கணக்குகள் பற்றிய குறிப்புகள்

### 1. கூட்டிணைத் தகவல்

**1.1** 1979 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, பாவனையாளர் பாதுகாப்புச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, நியாய வியாபார ஆணைக்குழுச் சட்டம், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம் (அத்தியாயம் 173) ஆகியவற்றை நீக்கியதன் மூலம் 2003 ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தாபிக்கப்பட்டது.

2011 செம்ரெம்பர் 15ஆம் திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/58/02 இன் பிரகாரம், ஒழுங்காக்கல் முகவராண்மைகளின் உப பிரிவு 'அ' என்ற பகுதியின் கீழ் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.2 முதன்மைச் செய்றபாடுகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்

பாவனையாளர்களைப் பாதுகாப்பதும் வர்த்தகத்தை ஒழுங்காக்குவதும் அதிகாரசபையின் முதன்மை (பிரதான) செயற்பாடாகும்.

1.3 2012 ஆம் ஆண்டின் முடிவில் உள்ளவாறு அதிகாரசபையின் ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 241 ஆகும்.

### 1.4 முக்கியமான பங்குகளை வைத்திருத்தல் (பங்குடைமை)/ உரிமையான்மை

திறைசேரியானது, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு பிரதான நிதியளிப்புச் செய்கின்றது. அதிகாரசபையின் நேரடி வருமானமாகிய தண்டப்பணங்களின் 1/3 பகுதியினால் உருவாக்கப்பட்டதே நிதியின் தேறிய நிலுவையாகும். அது அதிகாரசபையின் உரிமைப் பங்கினால் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது.

### 1.5 அரசாங்கக் கொடை

யாதாயினுமொரு கொடைக் கிடைக்குமென்ற நியாயமான உறுதிப்படுத்தல் உள்ள நிலையில் அவ்வாறான பெறுகைகள் அரசாங்க கொடைகளாக இனங்காணப்படும். யாதாயினுமொரு கொடை ஏதேனும் செலவின விடயம் தொடர்பாக இருப்பின், இது ஆண்டுக்கான வருமானமாக ஏற்றுக் கொள்ளப்படும். கொடையானது ஏதும் சொத்துத் தொடர்பானதாக இருப்பின், குறித்த சொத்தைப் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலம் முழுவதும் சமமான அளவுகளாக கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்ற வருமானமாக இனங்காணப்படும்.

காசல்லாத ஒரு சொத்து பாவனையாளர் அதிகார சபைக்குக் கிடைக்கும் பட்சத்தில் மேற்படி சொத்து மற்றும் கொடையின் பெயரளவுப் பெறுமதியைக் குறித்துக் கொண்டு, சொத்துக்களின் பயன்கள் சமமான வருடாந்தத் தவணைகளாக பயன்படுத்துகின்ற முறைக்கு அமைய அதன் உத்தேச பயன்களின் ஆயுட்காலம் முழுவதும் இலாபம் அல்லது நட்டம் என்ற வகையில் விடுக்கப்படும். சொத்துக்கள் மற்றும் நியாயமான

பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட காசல்லாத கொடைகள் தொடர்பில் அரசாங்க கொடை பிற்போடப்பட்ட வருமானமாக ஐந்தொகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 2. பொது கணக்கீட்டுக் கொள்கைகள்

2.1 இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அரசதுறைக் கணக்கீட்டு நியமகக் குழுவினால்வெளியிடப்பட்டுள்ள இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தராதரங்களுக்கு அமைவாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 மோட்டார் வாகனங்கள் தவிர, நிதிக் கூற்றுகள் வரலாற்றுக் கிரய அடிப்படையில் தயாரிக்கப்பட்டு முதிர்வுறு நிதிச் சொத்துகளாக வைக்கப்பட்டு நியாய பெறுமதியில் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கின்றன.

2.3 **தண்டப்பண வருமானம்**

2.3.1 தண்டப்பணத்திலிருந்து ஈட்டப்பட்ட வருமானம் அதிகாரசபையின் பொதுச் செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படாமையால், முன்னர் அது வருமானக் கூற்றில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. 2011 ஆம் ஆண்டிலிருந்து, பொது திறைசேரியின் அங்கீகாரத்துடன் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை இந்த வருமானத்தை உபயோகிக்கிறது. எனவே, தண்டப்பண வருமானம் வருமானமாகக் கருதப்பட்டு, அதனுடன் தொடர்புடைய சகல செலவினங்களும் வருமானங்களும் வருமான – செலவினக் கணக்கில் காட்டப்படுகிறது.

2.3.2 அதிகாரசபையானது,பணத்தை தண்டப்பண வருமானமாகப் பெற்றுக் கொள்ளும் சில சந்தர்ப்பங்கள் உள்ளன. மேலும், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் திடீர் சோதனை மேற்கொள்ளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கைக்கும், சம்பந்தப்பட்ட நீதிமன்றங்கள் தமது அனுப்புகைகளுடன் வழங்கிய எண்ணிக்கைகளுக்குமிடையில் வேறுபாடுகள் உள்ள அதேவேளையில் அவ்வருமானம் அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும். அவை உண்மையில் அதிகாரசபைக்கு உரித்தானவையா அல்லது நீதிமன்றினால் தவறுதலாக அனுப்பிவைக்கப்பட்டவையா என பரிசீலிக்கும் நோக்கத்துடன் பொதுவாக தொங்கல் - தண்டப்பண வருமான கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. அத்தகைய பணம் வருட முடிவு வரையில் அங்கீகரிக்கப்படாத ஒன்றாக இருப்பின், அது அதிகாரசபையின் பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்தில் பற்று வைக்கப்படும்.

2.4 நிதியாண்டு

டிசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவுறும் பஞ்சாங்க வருடமே அதிகாரசபையின் நிதியாண்டாகும்.

## 3. சொத்து அடிப்படைகளும் அவற்றின் விலை மதிப்பிடலும்

3.1.1 மோட்டார் வாகனம் தவிர பாவனையாளர் அதிகார சபையினால் கிரய அடிப்படையில் கணக்குகளைத் தயார் செய்யும் கொள்கை பின்பற்றப்படுகின்றது. (SLPSAS 7)

3.1.2 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆக்கக்கூறுகளைப் பிரதியீடு செய்தல் அடங்கலான தேறிய திரண்ட தேய்மானம், செலவு ஆகியவை தொடர்பாக ஆதனம், பொறி, மற்றும் உபகரணங்கள் கூறப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் முக்கியமான பகுதி பிரதியீடு செய்யப்படும்போது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, பிரதியிடப்பட்ட பகுதியை அங்கீகரிக்காது, புதிய பகுதியை அதன் சம்பந்தப்பட்ட பாவனைக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கிறது. பழுதுபார்த்தல் மற்றும் பேணுகைச் செலவுகள் நிகழ்ந்ததாக வருமானக் கூற்றில் மீள அங்கீகரிக்கப்படுகிறது.
ஏதேனும் மீள்மதிப்பிடல் மிகையானது, ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகாரிக்கப்படுவதுடன் சொத்து மீள்மதிப்பிடல் ஒதுக்களில் உள்ள உரிமையாண்மைப் பங்கில் திரட்டி வைக்கப்படுகிறது.

3.1.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஆகுசெலவு/ கிரயம் என்பது கொள்வனவு அல்லது அதனது உத்தேசிக்கப்பட்ட உபயோகத்திற்கென தொழிற்படும்/ இயங்கும் நிலைமைக்கு கொண்டுவருவதற்காக ஏற்பட்ட ஏதேனும் செலவினங்களுடனான நிர்மாணச் செலவு ஆகும்.

3.1.4 வியாபாரத்தைப் பேணிவருவதற்கு அல்லது சொத்துக்களின் பாவனைக் காலத்தை அதிகரிப்பதற்கு அல்லது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிரந்தர தன்மையின் மூலம் அவற்றின் சுவீகரிப்பு, விரிவாக்கல் அல்லது மேம்படுத்துகை நோக்கங்களுக்காக ஏற்பட்ட செலவினம், மூலதனச் செலவினமாகக் கருதப்படுகிறது.

3.1.5 வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கைஇலக்கம்150 இன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ஐந்து வாகனங்கள், (04 ரொயோட்டா ஹையேஸ் வான் மற்றும் 01 ரொயோட்டா மோட்டார் கார்) பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் வாகனத் தொகுதியில் சேர்க்கப்பட்டன. விலைப்பட்டியல் பெறுமதியான இலங்கை ரூபா 48,848,357/- ஆனது காசல்லாக்கொடையாக கருதப்பட்டு அவ்வாறே கணக்குகளில் பதிவு செய்யப்பட்டது.

### 3.1.6 மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள் (ரூபா 1,421,428.00)

2013.12.31 ஆம் திகதியளவில் கொன்சியுமர் வொச் கருத்திட்டதிற்கு செலவிடப்பட்ட ரூபா 1,421,428.00ஆன தொகை இதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## 3.2 **தேய்மானம்**

பெற்றுக் கொள்ளப்பட்ட சகல சொத்துகளும் அவற்றைப் பயன்படுத்திய மாதத்தின் ஆரம்பத்திலிருந்து அவற்றுக்கான தேய்மானம் செய்யப்படுகின்றது.

3.2.1 பின்வரும் மதிப்பீடு செய்யப்பட்ட பாவனைக்காலம் தொடர்பாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் செலவைப் பதிவழிப்பதற்கென மாறாத அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| அலுவலக தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10% |
| அலுவலக உபகரணம் | 10% |
| கணனி உபகரணம் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| அலுவலக பிரிவிடல்கள் | 20% |
| நுகர முடியாதவைகள் | 10% |

3.2.2 பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது தேய்மானத்தை கணிப்பிடும்போது நேர்கோட்டு முறையை உபயோகிக்கிறது.

3.2.3 நூலக புத்தகங்களுக்கென தேய்மானம் கணிக்கப்படவில்லை.

3.2.4 சம்பந்தப்பட்ட வருடத்துக்கான தேய்மானப் பெறுமதி பிற்போடப்பட்ட வருமானக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.

3.3 கட்டிடத் தொகுதிகள் - குருநாகல்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் குருநாகல் மாவட்ட அலுவலக கட்டிடத் தொகுதிக்கென குருநாகல் மாவட்டச் செயலாளரினால் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கட்டட வளவுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1 மில்லியன் ஆன தொகை 40 வருடங்களாக தவணை முறையில் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

## 3.4 **கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டியவை**

அட்டுறுவாகுமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ள தொகையில் கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டிய பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.5 பொருட்பதிவுகள் குறைந்த விலையில் அல்லது தேறிய தீர்க்கப்படக்கூடிய பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

### 3.6 காசும் காசுக்குச் சமமானவையும்

காசும் காசுக்குச் சமமானவையும் என்பதில் கையிலுள்ள காசு, வங்கியில் உள்ள காசு மற்றும் குறுங் கால முதலீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

3.6.1 காசுப்பாய்ச்சல் கூற்றில்,காசும் காசுக்குச் சமமானவையும் என்பதில் கையிலுள்ள காசு, மற்றும் வங்கியில் உள்ள காசு ஆகியன உள்ளடங்குகின்றன.

### 3.7 நிதிக்கருவிகள் (நிதிச் சாதனங்கள்)

### 3.7.1 காலம்பூர்த்தியடையும் வரை தடுத்துவைக்கப்பட்டுள்ள முதலீடுகள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிலையான வைப்புகளானவை முதிர்வுறு முதலீடுகளாக வைத்திருத்தல் என வகைப்படுத்தப்படுகின்றன. ஏனெனில், அது நிலையான கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சித் திகதிகளைக் கொண்டதாக உள்ளதனால் இவை காலம்பூர்த்தியடையும் வரை தடுத்துவைத்திருக்கும் முதலீடுகளாக வகைப்படுத்தப்படும். நிலையான வைப்புகள் ஆரம்பத்தில் செலவாக கணிப்பீடு செய்யப்படுகிறன.

குறித்த காலப் பகுதியினுள் நிலையான வைப்புகள் மீளப் பெறப்படுவதில்லை எனும் கடந்தகால அனுபவத்தை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கொண்டிருப்பதால்,நிலையான வைப்புகளில் பெரும்பாலானவை ஆகக்குறைந்தது 03 வருடங்களுக்கு நிலைத்திருக்குமென கருதப்படுகிறது.

### 3.7.2 விற்பனைசெய்ய வைக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துகள்

விற்பனைக்கென வகைப்படுத்தப்பட்டுள்ள நடைமுறையல்லாச் சொத்துகள் மற்றும் அகற்றல்கள் (விற்பனைக்குரியவை) ஆகியவை அவற்றின் முன்கொண்டு செல்லப்படும் தொகையை விட குறைந்த அளவில் அளவீடு செய்யப்பட்டு விற்பனைக்கான செலவுகள் தவிர்ந்த நியாய பெறுமதியாகும்.

## 4. பெறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 4.1 செலுத்தப்பட வேண்டியவைகள்

செலுத்தப்பட வேண்டியவைகள் அவற்றின் செலவுகளில்வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 4.2 இளைப்பாறு பயன்களுக்கான கடப்பாடு

கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டிய இரண்டு ஓய்வூதிய திட்டங்களை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை கொண்டுள்ளதுடன் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

### 4.2.1 வரையறுக்கப்பட்ட பயன் திட்டம் - பணிக்கொடை

பணிக்கொடையென்பது வரையறுக்கப்பட்ட பயன் திட்டமாகும். சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்களின் பிரகாரம், அதிகாரசபை பணிக்கொடையைச் செலுத்த வேண்டிய கடப்பாடு உடையது. இந்த கடப்பாட்டை (பொறுப்பை) எதிர்கொள்வதற்கென, ஐந்தொகையில் ஏற்பாடு ஒன்று முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இது, சேவையின் முதல் வருடத்திலிருந்து சேவை முடிவுறுத்தப்பட்ட ஒவ்வொரு வருடத்துக்குமென சகல ஊழியர்களுக்கும் நிதியாண்டின் இறுதி மாதத்தின் மாதாந்த சம்பள அடிப்படையிலே கணிப்பீடு செய்யப்படும் ஒரு தொகைக்குச் சமனானதாகும். வருட ஆரம்பத்தில் முன்கொண்டு செல்லப்பட்ட ஏற்பாட்டிற்கும் வருட முடிவில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட ஏற்பாட்டிற்கும் இடையில் ஏற்படும் வேறுபாடானது வருமானக் கூற்றில் கையாளப்படுகிறது.

இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் ஆகக் குறைந்த அளவான ஒரு வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஊழியர்களுக்கான பணிக்கொட ஏற்பாடு கணிக்கப்படுகிறது. பொது திறைசேரி முன்கூட்டியே நிதியை விடுவிக்காததால்,பணிக்கொடை திட்டத்திற்கு ஆதரவாக ஏதேனும் நிதியை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை முதலீடு செய்திருக்கவில்லை.

எவ்வாறாயினும் பணிக்கொடை ஏற்பாடுகளை தனியாக முதலீடு செய்வதற்கு பாவனையாளா் அதிகார சபை தற்போது அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டுக்கான ஏற்பாடுகளான 4,603,706 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2013.12.31 ஆம் திகதிக்குரிய திரண்ட ஏற்பாடுகளான ரூபா 17,833,134 ஆன தொகை இறுதி அங்கீகாரம் பெறப்பட்ட பின்னா் முதலீடு செய்யப்படும்.

தேவைப்படும் பொறுப்பு பூரயமாக முதலீடு செய்யப்படாதிருப்பதால், காப்புறுதிக் கணக்கின் இலாபம் அல்லது நட்டங்கள் இனங்காணப்படுவதில்லை.

### 4.2.2 வரையறுக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டங்கள்/ ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

சம்பந்தப்பட்ட நியதிச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக சகல ஊழியர்களும் ஊ.சே.நி. (EPF) மற்றும் ஊ.ந.நி. (ETF) கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்கள். ஊழியர்களின் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள், வருமானக் கூற்றில் செலவாக இனங்காணப்பட்டுள்ளன.

அதிகாரசபையானது,ஊழியரின் மொத்த சம்பளத்தில் 15% மற்றும் 3% ஐ முறையே ஊழியர் சேமலாப நிதியத்துக்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கும் கொடுப்பனவு செய்கிறது.

## 5. வருமானம்

இறைவரி அங்கீகாரம்

இறைவரி என்பது பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு எந்த அளவிற்குச் சென்றடையக்கூடிய சாத்தியத்துடனான அங்கீகாரம் மற்றும் நம்பகத்தன்மையுடன் அளவிடப்படக்கூடியதுமாகும்.

**வட்டி வருமானம்**

வட்டியை ஈட்டிக் கொடுக்கும் நிதிச் சொத்துகள் (நிரந்தர வைப்புகள்) முதிர்வுறும் நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டு, நிதிச் சொத்துகளின் தேறிய காவு தொகைக்கு பொருத்தமான இடங்களில் நிதிக் கருவிகளின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுட்காலம் பயனுறுதிமிக்க வட்டி வீதமாக (NIR) உபயோகித்து வட்டி வருமானம் பதிவு செய்யப்படுகிறது.

**அரசாங்கக் கொடைகள்**

யாதாயினுமொரு கொடைக் கிடைக்குமென்ற நியாயமான உறுதிப்படுத்தல் உள்ள நிலையில் அவ்வாறான பெறுகைகள் அரசாங்க கொடைகளாக இனங்காணப்படும். யாதாயினுமொரு கொடை ஏதேனும் செலவின விடயம் (மீண்டுவரும் கொடை) தொடர்பாக இருப்பின், இது ஆண்டுக்கான வருமானமாக ஏற்றுக் கொள்ளப்படும். கொடையானது ஏதும் சொத்துத் தொடர்பானதாக இருப்பின், (மூலதனக் கொடை) குறித்த சொத்தைப் பயன்படுத்தக்கூடிய ஆயுட்காலம் முழுவதும் சமமான அளவுகளாக கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகின்ற வருமானமாக இனங்காணப்படும்.

காசல்லாத ஒரு சொத்து பாவனையாளர் அதிகார சபைக்குக் கிடைக்கும் பட்சத்தில் மேற்படி சொத்து மற்றும் கொடையின் பெயரளவுப் பெறுமதியைக் குறித்துக் கொண்டு, சொத்துக்களின் பயன்கள் சமமான வருடாந்தத் தவணைகளாக பயன்படுத்துகின்ற முறைக்கு அமைய அதன் உத்தேச பயன்களின் ஆயுட்காலம் முழுவதும் இலாபம் அல்லது நட்டம் என்ற வகையில் விடுக்கப்படும்.

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } ரீசீ/ஈ/சீஏஏ/எப்ஏ/2013    ඔබේ අංකය / உமது இல. / Your No. }    දිනය / திகதி / Date } 2015 சனவரி 19

தலைவர்
நுகர்வோர் விவகார அதிகாரசபை

**நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை**

---

நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயற்பாடுகளின் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு, 2003 இன் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 50(3)ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரமான ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் தலைவருக்கு உரிய காலத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34   +94-11-2887223   oaggov@sltnet.lk   www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உளளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் கணக்கீட்டுக் கொள்கை மாற்றம் என ரூபா 366,000 வரை காட்டப்பட்டிருப்பினும், அது தொடர்பாக விளக்கங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

### 2.3 சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

2003 இன் 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் படி உற்பத்தியாளர் அல்லது வர்த்தகர் ஒருவரால் பொருட்கள் அல்லது சேவைகள் அதிகவிலைக்கு வழங்கப்பட்டதாகவோ அல்லது பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பில் ஏதாவதொரு வழியில் விற்பனை நிலையம் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை அல்லது வேறு ஏதாவது விற்பனை நிலையக் குறைபாடொன்று நிலவுகின்றமை பணிப்பாளர் நாயகத்திற்கு தோற்றுமிடத்து, அதனை விசாரணைசெய்து அறிக்கையிடுவதற்காக சபைக்கு தெரிவிக்க வேண்டுமெனினும், எரிவாயுவின் விலை குறைவடைந்த 2013 மார்ச் தொடக்கம் ஒக்தோபர் வரையான காலப் பகுதிக்குள் எரிவாயு கம்பனியொன்றினால் 04 சந்தர்ப்பங்களில் எரிவாயுவின் விலையை குறைக்காமை தொடர்பில் பணிப்பாளர் நாயகம் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடம் தொடர்பான அதிகாரசபையின் நடவடிக்கைகளினால் ஏற்பட்ட செயற்பாட்டு விளைவுகள் ரூபா 32,816,755 ஆன மிகை இருந்ததுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டுக்கான மிகையானது ரூபா 6,765,819 ஆக இருந்ததால் நிதிசார் விளைவுகளில் ரூபா 26,050,936 ஆன அதிகரிப்புக் காணப்பட்டது. மீண்டெழும் ஒதுக்கங்கள் முன்னைய ஆண்டைவிட அதிகமாகப் பெறப்பட்டமை, நானாவித வருமானம் அதிகரித்தமை, மற்றும் நிலையான வைப்பிற்கான வட்டி வருமானம் அதிகரித்தமை போன்றன இவ்வாறான அதிகரிப்புக்குக் காரணமாயமைந்தன. அவ்வாறே, அதிகாரசபையின் முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டுச் செலவினம் ரூபா 208,702,621 ஆக இருப்பினும், மீளாய்வாண்டின் போது அது ரூபா ர254,731,766 ஆனமையால் ரூபா 46,029,145 அதாவது 22 சதவீதத்தால் செலவினங்கள் அதிகரித்திருந்தன.

மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகளுக்கான ரூபா 4,970,000 திறைசேரி ஒதுக்கங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையால் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கு ரூபா 6,221,843 செலவிடப்பட்டிருந்தமையால் ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக ரூபா 1,251,843 செலவிடப்பட்டிருந்தது.

### 3.2 நிறுவகத்திறகு எதிராக தொடங்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிகாரசபை 2012 யூன் 18 ஆம் திகதிய 1763/4 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் குழந்தைகள் பாலுணவிற்கான விலைக் கட்டுப்பாடு தொடர்பில் தலையீடு செய்திருந்த பேச்சு வார்த்தை போதிலும் அவ்வாறு விலையிடல் சாதாரணமானதல்ல எனத் தெரிவித்து ஒரு பால்மா கம்பனி அதிகாரசபைக்கு எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தது.

(ஆ) 2010 பொதுத் தேர்தல் கால எல்லைக்குள் எத்தகைய அறிவித்தலுமின்றி சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்த முன்னாள் பணிப்பாளர் நாயகம் அதற்கெதிராக தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார். இரு தரப்பினருக்கும் சமாதானமாக தீர்ப்புக் கூறியபோது இது தொடர்பாக அதிகாரசபையால் ரூபா 3,560,400 ஆன நட்டஈடு சம்பந்தப்பட்ட

உத்தியோகத்தருக்குச் செலுத்தி வழக்கை சமாதானமாகத் தீர்க்கவேண்டியிருந்ததால் அத்தொகையால் ஓர் இழப்பு ஏற்பட்டிருந்தது.

4. **செயற்பாட்டு மீளாய்வு**

4.1 **செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) **கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பு**

2013 மே மாதம் 30 ஆம் திகதிய 1812/24 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் தோலுடனான புறொயிலர் கோழி இறைச்சிக்கு மட்டும் விற்கக்கூடிய உச்சவிலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது, தோல் நீக்கப்பட்டு பகுதிகளாக விற்கப்படும் ஏனைய கோழி இறைச்சி தொடர்பாக அவ்வாறான விற்கக்கூடிய உச்சவிலை நிர்ணயிக்கப்படாதிருந்ததால் அத்தகைய கோழி இறைச்சி வெவ்வேறான விலைகளில் விற்பனை செய்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருந்தன.

(ஆ) **பால்மா விலையுயர்வு**

(i) **முழு ஆடைப் பால்மா**

அடிப்படை ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா விலை அதிகரிப்புடன் பால்மா விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் கம்பனிகள் தமது உற்பத்திகளது விலைகளை அதிகரிப்பதற்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் அதிகாரசபையிடம் எழுத்துமூலம் வேண்டுகோள் செய்யப்பட்டிருந்தும் அதிகாரசபையால் அது தொடர்பாக எவ்வித பதிலும் தரப்பட்டிருக்கவில்லை. இவ்வாறான வேண்டுகோள் செய்திருந்த ஒரு கம்பனி அதிகாரசபையின் எழுத்துமூலமான அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் 2013 ஒக்தோபர் மாதத்தில் பால்மாவின் விலையை அதிகரித்திருந்துடன், அதுதொடர்பாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தபோது ஒரு கம்பனி அதிகாரசபைக்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்திருந்தது. இது தொடர்பாக அதிகாரச் சட்டத்தின் 18(4) ஆம் பிரிவின்படி விண்ணப்பம் பெறப்பட்டு 30 நாட்களுக்குள் தீர்வு வழங்குவதற்கு அதிகாரசபைக்கு இயலாதிருந்ததால்

விலையை அதிகரிப்பதற்கு கம்பனிக்கு உரிமையுண்டு என நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

**(ii) கொழுப்பற்ற பால்மா**

2003 ஆகஸ்ட் 20 ஆம் திகதியின் 1302/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பாலுணவு அத்தியாவசியப் பொருள் என தெரிவிக்கப்பட்டிருந்தும் கொழுப்பற்ற பால்மா தொடர்பாக அதிகாரசபையால் ஒரு கட்டுப்பாட்டுவிலை நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் காரணத்தினால் உற்பத்தியாளர்கள் மற்றும் விநியோகத்தர்கள் அதிகாரசபையின் அனுமதியின்றி தமக்குத் தேவையானவாறு பால்மாக்களின் விலையை நிர்ணயித்திருந்தனர்.

**(இ) கோதுமை மா விலை நிர்ணயித்தல்**

2004 மே 23 ஆம் திகதியின் 1342/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் கோதுமை மா அத்தியாவசியப் பொருள் எனப் பெயரிடப்பட்டிருந்தும், கோதுமை மா உற்பத்தி செய்து விநியோகிக்கும் செயற்பாடுகளைச் செய்யும் 02 கம்பனிகள் அதிகாரசபையின் அனுமதியைப் பெறாமல் விலைகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தும் அரசின் நீதிபதியால் இப்பொருள் நுகர்வோர் அதிகாரசட்டத்தின் 18(2) ஆம் பிரிவுக்கமைய கட்டுப்படுத்தவேண்டியதொன்று எனவும் விலையை அதிகரிக்கும் போது அதிகாரசபையின் முன் அனுமதியின் அடிப்படையில் நடைபெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தும் இந்த விலைக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரசபையின் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எரிவாயு (எல்பீ) விலை நிர்ணயித்தல்**

எரிவாயு விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் 02 கம்பனிகள் நுகர்வோர் விவகார அதிகாரசபையுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கிணங்க ஒவ்வொரு 02 மாதங்களுக்கு ஒருமுறை எரிவாயு விலை சீராக்கத்திற்காக செலவு மதிப்பீட்டினைத் தயாரித்து அதிகாரசபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும்,

ஒரு கம்பனி 2013 ஆம் ஆண்டினுள் எவ்வித விலைசீராக்கல் விண்ணப்பப் படிவங்களையும் சமர்ப்பித்திருக்கவில்லை.

2013 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உலக சந்தையில் எரிவாயு ஒரு மெட்ரிக் தொன்னின் விலை ஐக்கிய அமெரிக்க டொலர் 955 இலிருந்து 762 வரை குறைவடைந்திருந்தது, எனினும் தொடர்புடைய கம்பனி விலை சீராக்கல் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்காததினால் எரிவாயு விலையைக் குறைப்பதற்கு முடியாதிருந்தது. உடன்படிக்கையை மீறல் தொடர்பாக அதிகாரசபை எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

**(உ) குடிநீர் போத்தல்கள்**

2012 ஆம் ஆண்டில் அதிகாரசபையினால் செய்யப்பட்ட பரிசிலனையின்படி நீர் போத்தல்கள் கட்டாய நிலைப் பரீட்சைக்கு உட்படவேண்டுமெனவும், நுகர்வோரின் சுகாதார நிலையைப் பாதுகாத்தலுக்காக அதிகாரசபையின் கட்டுப்பாட்டிற்கு உட்பட வேண்டுமெனவும் நியமச் சான்றிதழ் பெறுவது கட்டாயமானது எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதிகாரச் சட்டத்தின்படி அதிகாரசபைக்கு அளிக்கப்பட்டிருந்த அதிகாரத்தினை உபயோகித்து, நியமங்களும் விலைக் கட்டுப்பாடுகளும் இல்லாமல் இத்தொழிலை நிருவகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு 02 வருடங்கள் மட்டிலான காலம் செலவிடப்பட்டிருந்தும், அதற்காக சட்டங்களையும் விதிகளையும் வழங்குவதற்கு முடியாதிருந்தமையால் ஒரு நீர்ப் போத்தலின் வழங்கல் விலைக்கும் சில்லறை விலைக்குமிடையே நூற்றுக்கு 25 வீதம் தொடக்கம் 60 வீதமான இடைவெளியில் சந்தை விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) நுகர்வோர் விலை தகவலறி செயற்திட்டம்**

நுகர்வுப் பொருட்களின் விலை விபரங்களை நுகர்வோருக்குத் தெரிவிப்பதற்காகவும் நுகர்வோர் முறைப்பாடுகள் தொடர்பாக தீர்வுகளை வழங்குவதற்காகவும் திறைசேரி ஒதுக்கீட்டின் கீழ் இச் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் செயற்திட்டத்திற்காக திறைசேரி ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தால் அதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அதிகார சபையால் ரூபா 5,590,834 செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இச் செயற்திட்டத்திற்காக திறைசேரியின் அனுமதி கிடைத்திருக்க வில்லை.

(ii) செயற்திட்டத்தின் கீழ் நுகர்வோரின் விசாரணைகளை பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,401,427 இற்கு உபகரணங்களைப் பொருத்துவதற்கு பகிரங்க கேள்வி கோரல் இடம்பெற்றிருக்காததுடன் அதிகாரசபையின் தலைவர் விதந்துரை செய்த சில கம்பனிகளிலிருந்து விலை மனுக்களைக் கோரி அமைச்சுக் கொள்வனவுக் குழுவினால் ஒரு கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது.

(iii) செயற்திட்டத்திற்காக அதிகாரசபையால் ரூபா 5,401,427 பெறுமதியான தொழில்நுட்ப உபகரணங்கள் அதிகாரசபைக்குச் சொந்தமான சுற்றாடலுள் பொருத்தியிருக்கவில்லை.

(iv) செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 6.6 மில்லியன் என்பதால் அதனை முடிவுறுத்துவதற்கு அவசியமான ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்வதற்காக எவ்வித வேலைத்திட்டமும் அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2013 சிறுபோகத்தின் போது நெல்விலை குறைவடைவதைத் தவிர்ப்பதற்காக திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது DFD/Agri/PP-2013 Yala ஆவது இலக்க 2013 யூலை 17 ஆம் திகதிய கடிதம் மூலம் 2012/13 மகாபோகத்திற்காக அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லிருப்பு விலங்கு உணவாக விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அதன்படி, நுகர்வோர் விவகார அதிகாரசபையால் 2008 ஆம் ஆண்டின் போது மனித நுகர்வுக்காக உகந்த நிலையில் இருந்த அரிசி மற்றும் நெல் விலங்குணவாக உபயோகிப்பதற்கு தடை செய்து விதிக்கப்பட்ட அறிவுறுத்தல் 2013

யூலை 29 ஆம் திகதிய 1821/5 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலால் தடுக்கப்பட்டிருந்தது. விலங்கு உணவாக உபயோகிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்ட 2012/13 பெரும்போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த நெல்லிருப்பு மனிதநுகர்விற்கு உகந்த மிக நல்லநிலையில் இருந்தமை நெல்சந்தைப்படுத்தும் சபையின் நெற் களஞ்சியங்களைப் பரிசீலனை செய்தபோது வெளிப்படுத்தப்பட்டது.

### 4.3 ஆளணி நிருவாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 370 ஆக இருந்ததுடன் அத் தினத்தில் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை 275 ஆக இருந்தது. இதன்படி, 95 பதவிகளுக்கு வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதனிடையே அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்குப் புறம்பாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் 37 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அதிகாரசபையில் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) அதிகாரசபையின் ஊடகஅலுவலர் பதவியில் கடமையாற்றிய அலுவலர் ஒருவர் 2013 மார்ச் 15 ஆம் திகதியிலிருந்து உள்நாட்டு மற்றும் வியாபார விவகார அமைச்சரின் ஊடகச் செயலாளராக கடமையேற்றிருந்த போதிலும் அந்த அலுவலருக்கு 2013 யூன் 30 ஆம் திகதி வரை 31/2 மாத காலப்பகுதிக்கு ரூபா 94,938 ஆன சம்பளம் மற்றும் ரூபா 17,084 ஆன ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன செலுத்தப்பட்டிருந்தன.

## 5. கணக்களி தகைமையும் நல்ஆளுகையும்

### 5.1 வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

2012 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

## 5.2 பொதுமுயற்சிகளுக்கான செயற்பாட்டுக் குழு வழங்கிய கட்டளைகளை நடைமுறைப்படுத்தல்

2012 ஒக்டோபர் 03 ஆம் திகதி நடைபெற்ற பொதுமுயற்சிகளுக்கான செயற்பாட்டுக் குழுவால் வழங்கப்பட்டிருந்த பின்வரும் கட்டளைகள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) அதிகாரசபையின் சேவையிலுள்ள தகைமைபெற்ற அலுவலர் ஒருவரைப் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரசபைக்கு கட்டளையிட்டிருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இரண்டாம் நிலைசேவை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் அப்பதவியின் கடமையாற்றுவது அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் வாகனம் திருத்துவதற்காக செலவிடப்பட்ட ரூபா 3,147,903 ஆன நிதி அந்த அமைச்சினால் மீளளிக்கப்பட்டிருக்காமை தொடர்பில் பொது முயற்சிகளுக்கான குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி செய்யப்பட்ட கட்டளை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் குறைபாடுகள் காலத்திற்குக் காலம் அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு
(ஆ) மனிதவள முகாமைத்துவம்
(இ) சொத்துக்களின் கட்டுப்பாடு
(ஈ) செயற்திட்டங்களின் கட்டுப்பாடு

ஒப்பம் : டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)(இ) பிரிவின் பிரகாரம் 2013.12.31 இல் முடிவுற்ற வருடத்துக்கான பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் நிதிக் கூற்றுகளின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் பற்றிய தவிசாளரின் கருத்துரைகள்**

**2.** நிதிக் கூற்றுகள்

**2.1** கருத்துரை

நிதிக் கூற்றுக்களின் மூலம் 2013.12.31 ஆம் திகதிக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் நிதி நிலைமைகள் மற்றும் அன்றைய திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான இலங்கை அரச கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையான மற்றும் நியாயமான நிலைமை வெளிப்படுத்தப்பட்டுள்ளதென்று கணக்காய்வாளர் தலைமை அதிபதி தெரிவித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றேன்.

**2.2.1** விபரிக்கப்படாத மாற்றங்கள்

**2.2.3** **<u>சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்கிகொழுகாமை</u>**

(அ) 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 19 ஆம் பிரிவு

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது, இரண்டு எரிவாயுக் கம்பனிகளுடன் எரிவாயுவின் விலை தொடர்பான விலைச் சூத்திரத்திற்கு அமைய விலையைத் தீர்மானிப்பதற்கு உடன்படிக்கைகளை செய்துகொண்டுள்ளது. மேற்படி உடன்படிக்கைகளுக்கு அமைய 02 மாதங்களுக்கு ஒருமுறை இரண்டு கம்பனிகளும் விலையைத் திருத்தியமைப்பதற்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். இது உலக சந்தையில் விலை அதிகரிப்பு மற்றும் விலைக் குறைப்பு இடம்பெறுகின்ற அனைத்துக் காலங்களுக்கும் ஏற்புடையதாகும். எனவே இது குறித்த உடன்படிக்கையின் கீழ் கட்டுப்படுத்தப்பட வேண்டிய விடயமாகும் என்பதுடன், சட்டத்தின் 19 ஆம் பிரிவை ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய தேவை எழுவதில்லை.

3. நிதிசார் மீளாய்வு

3.1 நிதிசார் பெறுபேறு

2013.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான அதிகார சபையின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 32,816,755ஆன மிகையாகும். இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 26,050,936ஆன வளர்ச்சியாகும். இதற்குப் பிரதானமாக மீண்டுவரும் பெறுகைகள் அதிகரித்துள்ளமை, நிலையான வைப்புக்களுக்கான வட்டிப் பெறுகை அதிகரித்துள்ளமை மூலம் வருமானம் அதிகரித்துள்ளமையும் மேற்படி வருமானம் அதிகரித்ததற்கு ஏற்ப செலவினம் அதிகரிக்காமையும் தாக்கம் செலுத்தியுள்ளது.

3.2 தாபனத்திற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்

(அ) 2012யூன் மாதம் 18 ஆம் திகதி 06 கம்பனிகள் சந்தைக்கு விநியோகிக்கின்ற 26 பால்மா வகைகளுக்கு உச்ச விலையை நிர்ணயித்து 1763/4 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன் போது ஒரு கம்பனி அதாவது நெஸ்லே கம்பனி மாத்திரம் இதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தது. சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கு அமைய அதிகார சபை மேற்படி வர்த்தமானி அறிவித்தலை ரத்துச் செய்தது.

(ஆ) அதிகார சபையில் கடமையாற்றிவந்த சேவை இடைநிறுத்தப்பட்ட முன்னாள் பணிப்பாளர் நாயமான திருமதி ஆர்.கே. ஜயசூரிய 2005.05.09 ஆம் திகதி முதல் 2006.10.12 ஆம் திகதி வரை சேவையாற்றிய பின்னர் 2006.10.12 ஆம் திகதி பதவீ நீக்கம் செய்யப்பட்டார். இது தொடர்பாக அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு நிராகரிக்கப்பட்டதுடன், மீண்டும் அதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ததுடன், இதன் போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய 2009.03.02 ஆம் திகதி முதல் ஒரு வருட நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டு பணிப்பாளர் நாயகம் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டார்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் 2010.02.18 ஆம் திகதி பதவீ நீக்கம் செய்யப்பட்டதுடன், அதற்கு எதிராக இவர் தொழில் நீதிமன்றில் கோரிக்கையொன்றைச் சமர்ப்பித்தார்.

1. மேற்படி கோரிக்கை பற்றி விசரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் 2013.11.20 ஆம் திகதி தொழில் நீதிமன்றத்தில் வழக்கினை இணங்கி முடிவுறுத்திக் கொள்வதற்காக ரூபா 3,560,400 ஆன தொகையைச் செலுத்தத் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய இது நிறுவனத்திற்கு ஒரு செலவினமாக இருந்தது. எனினும் மேற்படி அலுவலரை அதிகார சபையிலிருந்து பதவி நீக்கம் செய்யவேண்டி ஏற்பட்டமையானது, அதிகார சபையின் விருத்திக்கு அல்லது முழு நாட்டினதும் விருத்திக்கு முக்கியத்துவமிக்க தீர்மானமொன்றை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிருவாக பலமின்மை மற்றும் /அல்லது வேண்டுமென்றே இவர் அதனை நிறைவேற்றாமையும் நிறுவனத்தின் உயர் மட்ட முகாமைத்துவத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குள்ள ஆற்றல் இல்லாமை ஆகிய விசேட விடயங்களை பணிப்பாளர் சபை கவனத்தில் கொண்டு இவரின் சேவை அதிகார சபையின் ஏகமனதான தீர்மானத்திற்கு அமைய சேவை முடிவுறுத்தப்பட்டுள்ளதன் மூலம் இது உறுதி செய்யப்படுகின்றது. அதற்கமைய இந்தத் தீர்மானம் நிறுவனத்தின் நலன்கருதி மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றுகை

(அ) கோழி இறைச்சியின் விலை அதிகரித்தமை

குளிரூட்டப்பட்ட தோளுடனான புரொயிலர் கோழி இறைச்சி சந்தையில் பரவலாக விற்பனை செய்யப்படுகின்ற இறைச்சி வகையாகும் என்பதுடன் இதன் விலையைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சந்தையில் போட்டித்தன்மை காரணமாக தோள் அற்ற இறைச்சியையும் அதிக விலைக்கு விற்பனை செய்ய முடியாது. மேலும், இறைச்சிக் கடைகள் ஊடாக விற்பனை செய்யப்படுகின்ற சந்தைப் பங்கானது, புரொயிலர் கோழி இறைச்சியின் சந்தைப் பங்குடன் ஒப்பிடுகையில் மிகவும் சிறியளவில் மேலே

குறிப்பிடப்பட்ட காரணங்களினால் தோளுடனான கோழி இறைச்சியின் விலை கட்டுப்படுத்தப்பட்டதனால் தோள் அற்ற கோழி இறைச்சி மற்றும் கரி சிக்கன் என்ற வகையில் விற்பனை செய்யப்படுகின்ற கோழி இறைச்சிகளின் விலை அதிகரிப்பதில்லை.

தற்போது காணப்படுகின்ற திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் விலையினைக் கட்டுப்படுத்துவதானது, ஒட்டுமொத்த திறந்த பொருளாதார சந்தைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளல் வேண்டும்.

இதன் போது நாட்டின் ஒட்டுமொத்த பாவனையாளர்கள் மற்றும் வியாபரிகளுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு விலைக் கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டியுள்ளதனால் தோளுடனான கோழி இறைச்சியை பாவனையாளர்கள் பரவலாக நுகரும் முறைக்கு அமைய மாத்திரம் விலைக் கட்டுப்பாடு அமுல்படுத்தப்பட்டது. இதன் போது தோளுடனான கோழி இறைச்சியின் விலை கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக சுயமாகவே சந்தையில் மிகவும் குறைவான சந்தைப் பங்கைக் கொண்டுள்ள தோள் இல்லாத கோழி இறைச்சியின் விலையும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

எனவே நாட்டில் பெரும்பாலானோர் தொடர்பில் தாக்கம் தொடர்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றவாறு நேரடியாக விலைக்கட்டுப்பாடு வெற்றிகரமாக்கிக் கொள்ளப்பட்டுள்ளதுடன், குறைந்த சந்தைப் பங்கும் உள்ளது. தோள் அற்ற கோழி இறைச்சிக்கு மறைமுகமாக நிலையான விலையைப் பேணிவர முடிந்துள்ளதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

பொதுத் திறைசேரியின் பிரதிநிதிகள் மற்றும் கால்நடைவள, கிராமிய சமுதாய அபிவிருத்தி அமைச்சினால் பகுதி பகுதியாக விற்பனை செய்யப்படுகின்ற கோழி இறைச்சியின் விலை கட்டுப்படுத்தப்படக் கூடாதென்று அறிவிக்கப்பட்டது. மேற்படி விடயங்களைக் கவனத்தில் கொண்டு கோழி இறைச்சி விற்பனையை விலைக் கட்டுப்பாடு செய்யாது 2014 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதிய 1859/6ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

(ஆ) பால மா விலை அதிகரித்தல்

(i) முழு ஆடைப் பால்மா

பால் மா கம்பனிகள் விலையை அதிகரிப்பதற்காக விண்ணப்பங்களை அனுப்பியுள்ளமை உண்மையாகும். கணக்காய்வு வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு ஒரு கம்பனி அதாவது மெலிபன் கம்பனி விலையை அதிகரித்துள்ளது. மெலிபன் கம்பனியின் பால் மா 400 கிறாமின் விலையை ரூபா 325/- முதல் ரூபா 360/-வரையும், ஒரு கிலோ கிறாம் பால்மாவின் விலையை ரூபா 810/- முதல் ரூபா 890/- வரையும் அதிகரிப்பதற்கு 2013.04.05 ஆம் திகதி அதிகார சபைக்கு விண்ணப்பம் அனுப்பப்பட்டதுடன், மேற்படி தொகைகளுக்குத் தேவையான ஆவணங்கள் இல்லாமை காரணமாக மேற்படி ஆவணங்களைக் கோரி 2013.04.22 ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் அனுப்பாமை காரணமாக 2013.05.02 ஆம் திகதி பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 18(4) பிரிவின் கீழ் இடைக்கால தடை உத்தரவு வெளியிடப்பட்டது. மீண்டும் 2013.07.17 ஆம் திகதி மேலே குறிப்பிடப்பட்ட விண்ணப்பத்தைத்

தொடர்புபடுத்தி பால் மா 400 கிறாமின் விலையை ரூபா 325/- முதல் ரூபா 425/- வரையும், ஒரு கிலோ கிறாம் பால்மாவின் விலையை ரூபா 810/- முதல் ரூபா 1060/- வரையும் அதிகரிப்பதற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டதுடன், இது முதலாவது விண்ணப்பதுடன் தொடர்புடையதாக உள்ளதனால் அதற்கு விதிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு செல்லுபடியானதாக உள்ளதன் காரணமாக 30 நாட்களுக்குள் அதிகார சபையினால் விலை அங்கீகரிக்கப்படவில்லை. இது தொடர்பாக மெலிபன் கம்பனி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்த வழக்கு (கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்வாறு) தொடர்பாக அதிகார சபை சார்பாக மேற்படி விடயங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. 2014.05.30 ஆம் திகதிய கடிதம் மூலம் மெலிபன் கம்பனி, அதிகார சபை அங்கீகரித்துள்ள விலையில் அவர்களது பால்மாவினை விற்பனை செய்வதாக அறியத்தந்துள்ளது. பின்னர் மெலிபன் கம்பனி மேற்படி வழக்கினை வாபஸ் பெற்றுக் கொண்டது.

(ii) ஆடையற்ற பால் மா

2003 ஆம் ஆண்டு முதல் ஆடையற்ற மற்றும் ஆடையுடனான பால்மா விலை விண்ணப்பம் பற்றி ஆராயப்பட்டு விலைகள் வழங்கப்பட்டன. ஆடையற்ற பால்மா விசேடமாகக் கருதப்பட்டு மிகவும் சிறியளவில் சந்தையில் உபயோகிப்பதையும் கவனத்தில் கொண்டு பால்மா விலை மாற்றங்களுக்கு எம்மிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காது விலைகளை அதிகரிக்கின்ற நிலைமை அவதானிக்கப்பட்டதன் காரணமாக 2014 பெப்ருவரி 21 ஆம் திகதி ஆடையற்ற பால் மா உற்பத்திக் கம்பனிகள் விலைகளை அதிகரிக்கும் போது அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது.

(இ) கோதுமை மாவின் விலையை தீர்மானித்தல்

கணக்காய்வு வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியானதாகும் என்பதுடன், எதிர்காலத்தில் அதிகார சபையின் பூரண அங்கீகாரம் இன்றி விலை அதிகரிப்பு ஏற்படும் பட்சத்தில் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும், கம்பனிகள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அது பற்றி 30 நாட்களுக்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அறியத்தருகின்றேன்.

(ஈ) லிக்விடைட் பெற்றோலியம் (எல்பி) வாயு விலையைத் தீர்மானித்தல்

கேஸ் கம்பனிகள் அதிகார சபையுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கு அமைய ஒவ்வொரு 02 மாதங்களுக்கும் ஒரு முறை விலையைத் திருத்தியமைக்க கோரிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், மேலே குறிப்பிடப்பட்டவாறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக உடன்படிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட நடவடிக்கையாக திறைசேரியின் செயலாளருக்கு 2014.09.02 ஆம் திகதிய கடிதம் மூலம் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள தலையீடு செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

(உ) குடிநீர் போத்தல்

குடிநீரை பொதிசெய்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற PET போத்தல்களுக்கு இலங்கை தரநியமங்களைக் கட்டாயமாக்குமாறு இலங்கைக் கட்டளைகள் பணியகம் பாவனையாளர் அதிகார சபையிடம் கோரியிருந்ததுடன், அதிகார சபையானது அதற்குத் தேவையான பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது.

இதேவேளை இலங்கையில் குடிநீரை போத்தல்களில் அடைக்கின்ற உற்பத்தியாளர்களின் சங்கம் குறித்த PET போத்தல்களுக்கான இலங்கையின் தரநியமங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவிப்பதுடன், இது பற்றி செயற்படும் பொருட்டு இலங்கைக் கட்டளைகள் பணியகம், சுகாதார அமைச்சு, பாவனையாளர் அதிகார சபை மற்றும் இலங்கையில் குடிநீரை போத்தல்களில் அடைக்கும் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதியொருவர் உள்ளடங்கிய குழுவை நியமனம் செய்து இலங்கையின் தரநியமங்களில் மாற்றங்களைச் செய்யுமாறு இலங்கைக் கட்டளைகள் பணியகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் PET போத்தல்களின் தரநியமங்களை மாற்றியமைக்கும் போது உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை பாவனையாளர் அதிகார சபைக்கும், இலங்கைக் கட்டளைகள் பணியகத்திற்கும் அறியத்தருமாறு இலங்கையில் குடிநீரை போத்தல்களில் அடைக்கின்ற உற்பத்தியாளர்களின் சங்கத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

PET போத்தல்களுக்கான இலங்கையின் தரநியமங்களில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டவுடன், குறித்த தரநியமங்களை கட்டாயமாக்க அதிகார சபை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

குடிநீர் போத்தல்களின் விலை தொடர்பாக விலையிடல் பிரிவினால் ஆரம்ப ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இரண்டாவதாக பாவனையாளர் சபையினால் குடிநீரை போத்தல்களில் அடைக்கும் உற்பத்தியாளர்களை வரவழைத்து அது பற்றி ஆராய்ந்த பின்னர் அதற்கான சிபாரிசுகள் அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் குடிநீர் போத்தல்களுக்கான உச்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்படவுள்ளது.

(ஊ) பாவனையாளர் சேவைகளை வினவும் கருத்திட்டம்

i. 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அதிகார சபை சட்டத்தின் 49(3) இன் அ,ஆ,இ,ஈ ஆகிய பிரிவுகளுக்கு அமைய பாவனையாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து இந்தச் செலவினங்களைச் செய்வதற்கான தத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் இந்த பாவனையாளர் சேவைக் கருத்திட்டத்திற்கான செலவினங்கள் செய்யப்பட்டன.

ii. இவ்வாறான கருத்திட்டங்களில் காணப்படுகின்ற தொழில்நுட்ப நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு குறித்த மாதிரியமைப்பைக் கொண்ட கருத்திட்டங்களை அமுல்படுத்தியுள்ள நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் விலை மனுக்களைக் கோருவதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளதன் காரணமாக தெரிவு செய்யப்பட்ட தகைமைவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் (மட்டுப்படுத்தப்பட்ட விலைமனுக்கள்) அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தின் அடிப்படையில் விலை மனுக்கள் கோரப்பட்டன.

iii. பாவனையாளர் சேவைக் கருத்திட்டமானது பிரதானமாக தொட்டறிய முடியாத சொத்தொன்றாகக் கருதப்படுவதுடன், இது ஒட்டுமொத்த பாவனையாளர்களான மக்களுக்கும் ஆற்றப்படுகின்ற சேவையாகும். மேற்படி சேவையின் நிதிசார் பெறுமானங்கள் இரண்டு பகுதிகளாகும். அவையாவன,

01. வழங்கப்படுகின்ற சேவை(Soft ware)

02. மேற்படி சேவையை வழங்குவதற்குப் பங்களிப்புச் செய்கின்ற வன்பொருள் மற்றும் முறைமை வகைப்படுத்தல்கள்.(Hardware)

இதன் முக்கியமான மற்றும் அத்தியாவசியமான பகுதியான பாவனையாளர் சேவை வினவும் கருத்திட்டத்தின் மென்பொருளின் உரிமையானது பாவனையாளர் அதிகார சபைக்கு உரித்தாகின்றது.

மேற்படி சேவையை வழங்குவதற்கு அடிப்படையாக அமைகின்ற வன்பொருள்கள் சில பின்வருமாறாகும்.

01. Voice (IVR/OBD) plattorm
02. Application server
03. Subscription server plattorm
04. DB server

இவ்வாறான கருத்திட்டங்களின் வெற்றிக்காக இந்த உபகரணங்கள் எப்பொழுதும் 24 மணிநேரமும் முனைப்புடன் சேவையில் ஈடுபடுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செயற்படுத்துவதற்கு பாரிய மின்பிறப்பாக்கி உபகரணங்கள் மற்றும் ஒன்றுக்கொன்று வித்தியாசமான server மற்றும் மேலே குறிப்பிடப்பட்டவாறான வேறு வன்பொருள்களும் அவசியமாகின்றன. இவற்றை கொள்வனவு செய்வதற்கு பாரியளவில் நிதியைச் செலவிட வேண்டும் என்பதுடன், ஒருசில வன்பொருள்கள் பாரியளவான தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் மாத்திரமே காணப்படுகின்றன. (ஸ்ரீலங்கா ரெலிகொம், டயலொக் போன்ற நிறுவனங்கள்) மேலும் இந்த உபகரணங்களில் தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படும் பட்சத்தில் அவற்றை சீராக்கிக் கொள்வதற்கு பாரிய தொழில்நுட்ப அறிவும் அவசியமாகும்.

அதற்கமைய இந்த உபகரணங்களுக்கு பாரியளவில் நிதியைச் செலவிடல், தொழில்நுட்பம் பற்றிய சிக்கல்கள், ஒன்றுக்கொன்று மாற்றமான சேவை வழங்குனர்களுடன் செயற்பட வேண்டி ஏற்படல் போன்ற நடைமுறை நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு அதிகார சபையானது மேற்படி சேவையை வழங்குகின்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வது மிகவும் பொருத்தமானதும், நடைமுறைக்குச் சாத்தியமானதுமாக உள்ளதனால் இந்த விசேட மென்பொருளை அபிவிருத்தி செய்த நிறுவனத்தின் ஊடாக இந்தச் சேவையை வழங்குவதற்குப் பொறுப்பளிக்கப்பட்டது. அதற்கமைய இச்சேவை குறித்த காலப்பகுதிக்குப் பெற்க் கொள்ளப்பட்ட சேவைகளாகும்.

iv. கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 60 மி.ரூ. ஆகவிருப்பினும் மேற்படி கருதிட்டத்தினை 5.4 மி.ரூவாவுக்கு நிறைவு செய்ய முடிந்ததன் காரணமாக மேலதிக ஏற்பாடுகள் அவசியமாவதில்லை. மேலும் இக்கருத்திட்டத்தினை அதிகாரசபையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்த முடியும் என்பதனால் இதற்கு திறைசேரியிடமிருந்து ஏற்பாடுகள் கோரப்படவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான கருத்திட்டங்களுக்கு திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்வது உகந்ததென்பதனால் அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4.2 கருத்துமுரண்பாடுகளுக்குக் காரணமான கொடுக்கல் வாங்கல்கள்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினால் 2008.01.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட கட்டளை 19 இனை ரத்துச் செய்யுமாறு சட்ட மாஅதிபர் திணைக்களம் அதிகார சபைக்கு வழங்கிய அறிவுரைக்கு அமைய குறித்த கட்டளையை 2013.07.29 ஆம் திகதி ரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4.3 பதவியணியினர் நிருவாகம்

(அ)(i) 2013 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகார சபையில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளுக்கு தற்போது பதவியணியினர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதுடன், பின்வரும் பதவிகளுக்கு தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் உள்ளக அல்லது வெளிவாரி அடிப்படையில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாமை காரணமாக குறித்த பதவிகள் மாத்திரம் வெற்றிடமாகக் காணப்படுகின்றன.

1) சிரேஷ்ட முகாமையாளர் HM 1-1− பணிப்பாளர் (விலை மற்றும் முகாமைத்துவம்)

2) சிரேஷ்ட முகாமையாளர் JM 1-1–ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளுக்கு அமைய இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடிவது உள்ளக விண்ணப்பதாரர்களிலிருந்து தகுதிவாய்ந்தவர்களை மாத்திரமாகும். (வெளி விண்ணப்பதாரர்களை இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடியாது.) அதற்கமைய பின்வரும் பதவிகளுக்கு உள்ளக அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்ய தகுதிவாய்ந்த அலுவலர்கள் முன்வரவில்லை. எனவே வெளியிலிருந்து தகுதிவாய்ந்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்காக ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளை திருத்தியமைப்பதற்காக தற்போது அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு CAA/HRA/DMS/01 ஆம் இலக்க 2013.09.27ஆம் திகதிய மற்றும் CAA/HRA/DMS/01ஆம் இலக்க2014.01.03ஆம் திகதிய கடிதங்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(II) உதவிப் பணிப்பாள் மற்றும் பிரதிப் பணிப்பாளர் பதவிகள் 2 உம் MMசம்பள வகுதியின் தரம் Iமற்றும் தரம் IIஆகக் காணப்படுகின்ற 2 தரங்களாக ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கமைய ஒரு அலுவலர் முதலில் MM1-1 சம்பள வகுதியின் தரம் IIஇற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு 12 சம்பள நிலைகளுக்குப் பின்னர் ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளின் கீழ் பதவி உயர்த்துவது தொடர்பான ஏனைய தேவைகளையும் பூர்த்தி செய்த பின்னர் Iதரம் இன் பிரதிப் பணிப்பாளர் பதவிக்குப் பதவி உயர்த்தப்படுவார்.

மேலும் 2013 பெப்ருவரி 01 ஆம் திகதி முதல் உதவிப் பணிப்பாளர்கள் இருவர் பிரதிப் பணிப்பாளர் பதவிகளுக்குப் பதவி உயர்த்தப்பட்டிருப்பது புதிய ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகள் அங்கீகரிக்கப்பட்ட 2012.08.08 ஆம் திகதிக்கு முன்னர் காணப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைய நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகள் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கு அமையவாகும் என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

(III)பிரதிப் பணிப்பாளர் மனித வள நிருவாக அலுவலர் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு அமைய விலை மற்றும் முகாமைத்துவப் பிரிவுக்கு தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளார். விலை மற்றும் முகாமைத்துவப் பிரிவில் சேவையாற்றுகின்ற உதவிப் பணிப்பாளருடன் இணைந்து (விலை மற்றும் முகாமைத்துவம்) குறித்த பிரிவினால் வழிநடாத்தப்படுகின்ற அதிகார சபையின் விசேட கருத்திட்டமொன்றான மருந்துகளின் விலைகளை ஒழுங்குபடுத்தும் கருத்திட்டத்தை அமுல்படுத்தும் நடவடிக்கைகளுக்கு இவர் தற்காலிகமாக இணைப்புச் செய்யப்பட்டுள்ளார்.

(IV)பணிப்பாளர் (விலை மற்றும் முகாமைத்துவம்) பதவிக்கு 2013 யூன் மாதம் நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டதுடன் அதில் கலந்துகொண்ட உள்ளக மற்றும் வெளிவிண்ணப்பதாரர்கள் குறித்த பதவியில் காணப்படுகின்ற நிபந்தனைகளுக்கு (சம்பள அளவுத்திட்டம் உள்ளடங்களான நிபந்தனைகள்) இணங்காமை காரணமாக ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகளுக்கு அமைய தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர் ஒருவரை தெரிவு செய்துகொள்ள முடியவில்லை.

(V). கணக்காய்வு அலுவலர் பதவி அதிகார சபையின் JM 1-1 சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்தானதாகும் என்பதுடன், உள்ளக விண்ணப்பதாரர்களிலிருந்து மாத்திரம் தகுதிவாய்ந்தவர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டிய பதவியாகும். அதற்கமைய நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்டு 2013.08.01 ஆம் திகதி முதல் உள்ளக அலுவலர் ஒருவரை கணக்காய்வு அலுவலர் பதவிக்கு நியமனம் செய்வதற்கான நியமனக் கடிதம் வெளியிடப்பட்டிருந்ததுடன்,குறித்த அலுவலர் அப்பதவியை பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை. எனவே தகுதிவாய்ந்த உள்ளக விண்ணப்பதாரர்கள் இல்லாமை காரணமாக மேற்படி பதவி வெற்றிடமாக உள்ளது. அதற்கமைய வெளி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் அமைச்சுக்கு பணிப்பாளர் நாயகத்தின் கைஒப்பத்துடன் (CAA/HRA/DMS/01) ஆம் இலக்க 2013/01/07 ஆம் திகதிய கடிதம் மற்றும் CAA/HRA/DMS/01) ஆம் இலக்க 2014/01/03 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சின் செயலாளர் ஊடாக முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பாவனையாளர் அதிகார சபையின் ஊடக அலுவலராக செயற்பட்டு வந்தவர் 2013 யூன் மாதம் 30 ஆம் திகதி வரை அதிகார சபையில் சேவையாற்றி வந்திருந்ததுடன், இவர் 2013.03.15 ஆம் திகதி முதல் அமைச்சில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதாக அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அவ்வாறு மூன்றறை மாதகாலப்பகுதிக்கு மேலதிமாக செலுத்தப்பட்டிருந்த சம்பளம் மற்றும் ஏனைய தொகைகள் தொடர்பாக அமைச்சிடம் வினவி மேலதிக கொடுப்பனவுகளை மேற்படி அலுவலரிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

5. கணக்கு நடவடிக்கைகளும், நல்லாட்சியும்

5.1 ஆண்டறிக்கைகளை அவையில் சமர்ப்பித்தல் -
2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையை உச்சளவில் குறைத்துக் கொண்டு உரிய காலப்பகுதிக்குள் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகளை செய்யப்படுமென்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

**5.2** அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகளை அமுல்படுத்தல்

(அ) 2012.10.03 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க தொழில்முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட சகல விடயங்கள் தொடர்பாகவும் பதிலளிக்கப்பட்டது. இதன் போது சட்டத்தின் 6 ஆம் பிரிவுக்கு அமைய அதில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதன் காரணமாக பணிப்பாளர் நாயகம் பதவிக்கு இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த (தற்போது விசேட தரத்தில் உள்ள) அலுவலர் ஒருவர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளமை அறிவிக்கப்பட்டது. அதற்கமைய 2014.02.20 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்க பெறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவில் வினாக்கள் எதுவும் கேட்கப்படவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இது தொடர்பாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவுக்கு பதில் அனுப்பப்பட்டதுடன், 2014.02.20 ஆம் திகதிய அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய அறிக்கையில் இது பற்றி அறிக்கையிடப்படவில்லை. எவ்வாறாயினும் இந்நிதியை அப்போதைய உள்நாட்டு வர்த்தக, கூட்டுறவுத்துறை அமைச்சு மீள்நிரப்புச் செய்ய இணக்கம் தெரிவித்து அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இவ்விடயம் பற்றி தற்போது மேற்படி அமைச்சு உரித்தான உணவுப்பாதுகாப்பு பற்றிய அமைச்சுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அவர்கள் குறித்த தொகையைச் செலுத்துவதாக மீண்டும் உறுதி செய்துள்ளனர்.

**6.** முறைமையும், கட்டுப்பாடும்

அ முதல் ஈ வரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மிக்க வினைத்திறனுடனும், உற்பத்தித்திறனுடனும் பேணிவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.



கலாநிதி.ஆர்.எம்.கே. ரத்நாயக்கா

தவிசாளர்